Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம் பிலவ தை 26 ஆம் நாள் ரம்ழான் 2 (8-2-62) வியாழக்கிழமை இதழ் 310

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# அரசாங்க ஊழியருக்கு சிங்கள போதனை

## முழுநேர ஆசிரியர் நியமிக்க முடிவு

### உத்தியோகமொழி இலாகா தீர்மானம்

கொழும்பு, புதன்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இலங்கையின் உத்தியோக மொழியான சிங்கள மொழியைக் கற்பிப்பதற்கு உத்தியோகமொழி இலாகா தனக்கென ஆசிரியர்களை வைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளது.

உத்தியோக மொழி இலாகாவின் இத்தீர்மானத்துக்கிணங்க வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியைக் கற்பிப்பதற்காக உத்தியோக மொழி இலாகா முழு நேர ஆசிரியர்களை அனுப்பி வைக்கவிருக்கிறது.

முழு நேர ஆசிரியர்கள் சிலரை வெளியூர்களுக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க இலாகாக்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள மொழி போதிப்பதற்காக அனுப்பி வைக்க உத்தியோக மொழி இலாகா உத்தேசித்துள்ளது என்று இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்குச் சிங்கள மொழியைப் போதிப்பதற்கு இப்பொழுது ஆசிரியர்கள் பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களென்றும் இது சிங்களம் பயிலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கோ அரசாங்கத்துக்கோ பயனளிக்கவில்லையென்றும் உத்தியோக மொழி இலாகா அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளதென்று அந்த அதிகாரி கூறினார்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக மொழியில் போதனையளிப்பதற்கு முழு நேர ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தராதரம் பெற்ற ஆசிரியர்களை ஒழுங்கு செய்து தருமாறு அரசாங்கத்தை உத்தியோக மொழி இலாகா கேட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# மேலும் மூவர் கைது

## காவலில் 29 பேர்

கொழும்பு, புதன்

தோல்வியில் முடிந்த புரட்சி சதித்திட்டம் சம்பந்தமாக மேலும் மூவர் இன்று காலை கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இதுவரை மொத்தம் 29 பேர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சுப்பிரின்டென்டன்ட் (குற்றப்பிரிவு) திரு. டபிள்யு. ஈ. ஸி. ஜெபநேசன், முன்னாள் பொலிஸ் சுப்பிரின்டென்டனாகவும் பின்னர் வர்த்தக ஸ்தாபனமொன்றில் உயர்பதவி வகித்தவருமான திரு. ஆர். ஈ. கிட்டோ, உதவி இன்ஸ்பெக்டர் திரு. டபிள்யு. டி. ஓ. சந்திரா ஆகிய மூவருமே இன்று காலை கைதுசெய்யப்பட்டவர்கள்.

திரு. ஜெபநேசன் 1959-ம் வருடத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உதவியாளராகப் பணியாற்றியவர்.

திரு. கிட்டோ உடற்பயிற்சி விளையாட்டு வட்டாரங்களில் பிரபல்யம் வாய்ந்தவர்.

சதித்திட்டம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட பொலிஸ் சுப்பிரின்டென்ட்களில் திரு ஜெபநேசன் மூன்றாவதாக இடம்பெற்றுள்ளார். காலி பொலிஸ் சுப்பிரின்டென்டன்ட் திரு வி. ஈ. பெரேராவும் மாத்துறை பொலிஸ் சுப்பிரின்டென்டன்ட் திரு. டேவிட்தம்பையாவும் ஏற்கெனவே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை ஒன்பது பொலிஸ் அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். காவலில் வைக்கப்பட்டுள்ள ஆறு சிவிலியன்களில் திரு. சிட்னி டி' சொய்ஸா, திரு. லயனல் குணத்திலக்கா, திரு. கிட்டோ ஆகிய மூவரும் பொலிஸ்சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். ராணுவத்தைச் சேர்ந்த 14 அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறுபேர் தரைப்படையைச் சேர்ந்தவர்கள்.

# சகல பாடசாலைகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டும்

## கல்விக்கமிஷன் உபகுழு சிபார்சு

### தனிப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கு அரசாங்க உத்தியோகம் மறுப்பு!

கொழும்பு, புதன்

நாட்டிலுள்ள தனிப்பட்ட பாடசாலைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் தனிப்பட்ட பாடசாலைகள் இருக்கும்வரை, அப்பாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு அரசாங்க சேவையில் நியமனம் கொடுக்கக் கூடாதென்றும் தேசிய கல்விக் கமிஷனின் உப குழுவொன்று சிபார்சு செய்துள்ளது.

தனிப்பட்ட பாடசாலைகளின் பிள்ளைகளுக்கு சர்வகலாசாலையில் கல்வி பயில அனுமதி வழங்கக் கூடாது. உபகாரச் சம்பளத்தின் கீழ் கல்வி கற்கும் வசதி வழங்கக் கூடாது; கடற்படையில் அனுமதி வழங்கக் கூடாது என்றும் அந்த உப குழு யோசனை தெரிவித்துள்ளது.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டபோது, கட்டணம் வசூலிப்பதில்லையானால் சில பாடசாலைகளைத் தனிப்பட்ட பாடசாலைகளாகத் தொடர்ந்து நடத்துவதற்கு மதஸ்தாபன சபைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டதென்று கூறும் தேசிய கல்விக் கமிஷனின் உப குழு, தனிப்பட்ட பாடசாலைகளாக அனுமதிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் யாவும் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட்டு, இணைக்கப்பட்ட தேசியக் கல்வித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டுமென்று சிபார்சு செய்துள்ளது.

வர்த்தகத் துறையில் நடத்தப்படும் தனிப்பட்ட பாடசாலைகளும் எடுக்கப்பட்டு, தேசிய பாடசாலைகளாக நடத்தப்பட வேண்டுமென்றும் உப குழு சிபார்சு செய்துள்ளது.

இந்த மாற்றம் செய்யப்படும் வரை வர்த்தக ரீதியில் நடைபெறும் தனிப்பட்ட பாடசாலைகளிடம் வரி அறவிடப்பட வேண்டுமென்றும் உப குழு சிபார்சு செய்துள்ளது.

## தினசம்பள ஊழியர் வேலைநீக்கம் செய்ய இ. போ. ச. உத்தரவு

கொழும்பு, புதன்

தினச்சம்பள அடிப்படையில் சென்ற ஆறுமாத காலத்துக்குள் புதிதாக வேலைக்கு எடுக்கப்பட்ட ஊழியர்கள் எல்லோரையும் உடனடியாக வேலைநீக்கம் செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபை உத்தரவிட்டுள்ளது.

புதிதாகவும் எவரையும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்றும் சபை உத்தரவிட்டுள்ளது.

# ருமேனியா-இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, புதன்

இலங்கைக்கும் ருமேனியக் குடியரசுக்குமிடையிலுள்ள வர்த்தக உறவை விஸ்தரிப்பதற்கான ஒரு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் உணவு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளையும் ருமேனியாவின் சார்பில் ருமேனிய வர்த்தக உதவி அமைச்சரும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி ருமேனியாவிடமிருந்து வெள்ளை சீனி மற்றும் சிலபொருள்களை இலங்கை வாங்கும். இலங்கையிடமிருந்து ரப்பர், தேங்காய் எண்ணெய், கொக்கோ முதலிய பொருள்களை ருமேனியா வாங்கும்.

ருமேனியாவுக்கும் இலங்கைக்குமிடையில் மற்றுமொரு வர்த்தக உடன்படிக்கையும் இன்று கைச்சாத்திடப்பட்டது. இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்துக்கும் ருமேனிய பெட்ரோலிய ஸ்தாபன

(5ம் பக்கம் பார்க்க)

பண்டாரநாயக்கா கொலைவழக்கு

# பிரீவிகவுன்சிலுக்கு அப்பீல் தாக்கலாகிறது

## வழக்கறிஞர்கள் ஏற்பாடு

கொழும்பு, புதன்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்வதற்கான மனுப்பத்திரங்கள் யாவும் சரி பார்க்கப்பட்டு அப்பீல் தாக்கல் செய்யப்படுவதற்காக லண்டனிலுள்ள வழக்கறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சுப்ரீம் கோர்ட்டினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட புத்தரக்கித்தாவுக்கும், எச். பி. ஜயவர்த்தனாவுக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இத்தீர்ப்பை அப்பீல் நீதிமன்றம் ஆயுட்காலச் சிறைத் தண்டனையாகக் குறைத்துத் தீர்ப்பளித்தது. புத்தரக்கித்தாவின் சார்பிலும், ஜயவர்த்தனாவின் சார்பிலும் பிரிவுகவுன்சிலில் வாதாடுவதற்காக வழக்கறிஞர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்ட சோமராமாவும் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்கிறார்.

---

கொழும்பு, புதன்

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்த முயற்சியை முளையிலேயே நசுக்கிவிட்ட அரசாங்கத்தின் துணிச்சலை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மத்திய கமிட்டி பாராட்டியுள்ளது.

# தேர்தல் களத்தில் சூடு

## தலைவர்கள் விளக்கம்

தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற இன்னும் எட்டு நாட்களே இருக்கின்றன. இம்மாதம் 17-ம் திகதி தமிழ் நாட்டில் வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிறது. தேர்தல் பிரசாரத்தில் எல்லாக் கட்சித்தலைவர்களும் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கு தேர்தல் பிரசாரம் சூடுபிடித்திருக்கும் இச்சமயத்தில் இந்தியாவின் பெருந்தலைவர்களும் தமிழ்நாட்டுக்குத் தேர்தல் பிரசாரம் செய்ய வந்திருக்கிறார்கள். இந்த வாரத்தில் தமிழகத் தேர்தல் களத்தில் மிகுந்த கொந்தளிப்பு ஏற்படுமென்று சொல்லலாம்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சஞ்சீவிரெட்டியும், இந்தியப் பிரதமர் திரு நேருவும் மின்னல்வேகத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களின் இறுதிநேர தமிழ்நாடு விஜயம் தேர்தல் முடிவுகளில் சில மாற்றங்களைக் கொண்டுவரலாம். தாம்பரத்தில் திரு. சஞ்சீவிரெட்டி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். திரு. நேரு திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பிரமாண்டமான கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை பேசுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### எதிர்க்கட்சிகளிடம் திட்டம் இல்லை!

காஞ்சிபுரம் தொகுதியில் தி. மு. க. தலைவர் திரு. அண்ணாத்துரையை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. நடேசமுதலியாரை ஆதரித்து திரு. சஞ்சீவிரெட்டி ஓர் கூட்டத்தில் பேசினார். அவர் பேசியதாவது:—

"தமிழ் நாட்டில் சிலர் திராவிட நாடு கேட்கிறார்கள். பஞ்சாப்பில் சீக்கியர் ராஜ்யம் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட பிரிவினைகள், தேசத்திற்கே ஆபத்து. ஒற்றுமையுடன் இல்லாவிட்டால் நம்மை வல்லரசுகள் விழுங்கிவிடுவார்கள். சிறு நாடுகள் தனித்து வாழ்வில்லையா என்று கேட்கிறார்கள். வல்லரசுகளின் பாதுகாப்புடன் தானே அவை இருக்கின்றன. ஏழ்மையைப் போக்குவதே காங்கிரஸின் திட்டம்! இதற்கு யார் ஆலோசனை கூறினாலும் ஏற்றுக்கொள்வோம். எதிர்க்கட்சிகளிடம் திட்டம் இல்லை. மக்களுக்கு நிறைய உரிமை கொடுத்து இருக்கிறோம். எதையும் உண்மைபோலத் திரித்துக்கூற அண்ணாத்துரைக்குக்கூட உரிமை உண்டு. வெளிநாடுகளில் இப்படி முடியுமா? எதிர்க்கட்சிகள் தகாத முறையில் கூட்டணி கொள்கின்றன. இவை அரசியல் கட்சிகளே இல்லை. சிறு கூட்டங்கள்; ஆளுக்கு 5 ஏக்கர் நிலம் தருகிறோம். நில உரிமையை நீக்குகிறோம் என்று எல்லாம்

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

எதிர்க்கட்சிகள் வாக்குறுதிகள் கொடுக்கும். ஏனென்றால், ஆட்சிக்கு வரமாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், காங்கிரஸ் அப்படியல்ல பொறுப்புள்ள கட்சி. செய்யவேண்டியதை சொல்வோம், சொன்னதைச் செய்வோம். வடநாடு வளர்கிறது, தென்னாடு தேய்கிறது என்று சொல்கிறார்கள். இது தேசத்தை பார்க்காதவர்களின் பேச்சு. நேருவின் சொந்த ராஜ்யமான உத்திரப்பிரதேசத்தைப் போய் பார்க்கட்டும். அதைவிட ஆயிரம் மடங்கு தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது. சென்ற தேர்தலில் அண்ணாத்துரைக்கு வோட்டுப்போட்டு காஞ்சிபுரம் மக்கள் தவறு செய்துவிட்டார்கள். இந்தத்தடவை அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும், நடேசமுதலியாருக்கு வோட்டுப் போடவேண்டும். டெல்லி சட்டசபைக்கு அளகேசனுக்கு வோட்டுப்போடுங்கள். இந்தியா முழுவதும் நான் சுற்றிப் பார்த்தேன். தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றிபெறும் என்பது உறுதி!"

### 'காங்கிரஸிடம் உளுத்துப்போன பருப்புத்தான் இருக்கிறது'

சென்னை கோமளீசுவரன் பேட்டையில் நேற்று இரவு நடந்த சுதந்திரக்கட்சிப் பொதுக்கூட்டத்தில் ராஜாஜி பேசியதாவது:— "தேர்தல் நெருங்கிவிட்டது. இரண்டு கட்சிகளின் போர் நடக்கிறது. ஒன்று சுதந்திரக்கட்சி; இன்னொன்று காங்கிரஸ் கட்சி. வியாதி தீரவில்லை என்றால் வைத்தியனை மாற்றவேண்டும். 'என் மருந்தை தொடர்ந்து சாப்பிடுங்கள். குணம் அடையலாம் என்றுதான் வைத்தியன் சொல்வான். ஆனால் அவன் பேச்சைக் கேட்கக்கூடாது. அவனை விரட்டியடித்துவிட்டு, புதுமருந்தை உபயோகித்துப் பார்க்கவேண்டும். ஒரேகடையில் சாமான் வாங்கக்கூடாது. அவன் நம்மை ஏமாற்றிவிடுவான். பல கடைகளில் சாமான்வாங்கிப் பார்க்கவேண்டும். காங்கிரஸ் கடையில் சாமான் வாங்கவே கூடாது. அங்கு உளுத்துப்போன பருப்புத்தான் இருக்கிறது. காங்கிரஸ் கடையைத் தேடிப்போனால் அவன் வைத்ததே சட்டம்; சொன்னதே விலை என்று ஆகிவிடும். என் சுதந்திராக் கட்சிக் கடையில் நல்ல சாமான் இருக்கிறது. மக்கள் என் கடை சாமான்களை வாங்கிச் சோதனை பார்க்கவேண்டும்.

சென்னைக்கு நேரு வருகிறார். காங்கிரஸ்காரர்கள் அவருக்குப் பிரமாண்டமான வரவேற்புக் கொடுப்பார்கள். தெருவெல்லாம் தோரணம் கட்டி ஜே ஜே என்றிருக்கும். ரோட்டில் அரைமணி நேரம் போக்குவரத்தை நிறுத்திவிடுவார்கள். இதுதான் அவர்கள் சாதனை! 15 ஆண்டுகளாக வேறு எந்த சாதனைகளையும் அவர்கள் செய்தது இல்லை!"

### 'என்னைத் தூக்கில் போடுங்கள்'

காஞ்சிபுரம் ஆடிஷன் பேட்டை செட்டித் தெருவில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அண்ணாத்துரை பேசியதாவது: "ஒரு கூட்டத்தில் மந்திரி பக்தவதசலம் பேசுகையில், 'அண்ணாத்துரையை சட்டசபைக்கு அனுப்பினீர்களே! அவர் உங்களுக்கு என்ன செய்தார்?' என்று கேட்டாராம். நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கக்கூடாது என்று காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள் போலும் தோட்டத்தில் உள்ள சோளக் கொல்லை பொம்மை கூட, பறவைகள் விரட்ட பயன்படுகிறது. அதற்கு கூட எதிர்க்கட்சி லாக்யகு இல்லை என்று மந்திரி நினைக்கிறாரா? எனக்கு அந்தஸ்து வர வேண்டும் என்பதற்காக தேர்தலில் நிற்கவில்லை இந்த அந்தஸ்து ஒன்றும் எனக்குப் புதியது அல்ல என்னை பாராட்டாத ஆள் இல்லை வரவேற்காத ஊர் இல்லை காமராஜரை விட நான் அதிகமாக, 2 காந்தி சிலைகளை திறந்து இருக்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி போடுவோம் அப்படிப் போடாவிட்டால் எங்களை அந்தமான் தீவுக்கு அனுப்புங்கள் என்று முன்பு சொன்னேன். ரூபாய்க்கு 3 படி அரிசி விற்க முடியுமா என்று சிலர் கேட்கிறார்கள் அப்படி 3 படி விற்கா விட்டால், என்னை அந்தமானுக்கு கூட அனுப்பவேண்டாம்—தூக்கில் போட்டு விடுங்கள். என்னை எதிர்த்து நிற்கும் நடேச முதலியாருக்காவது சொந்தக்காரர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள் ஆனால் எனக்கு, வாக்காளர்கள் ஆகிய நீங்கள்தான் சொந்தம். ஊருக்கு உழைத்து தொண்டு செய்வது தான் என் வேலை, எதிர்க்கட்சியாகத்தான் இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறினால் அது எங்கள் பாக்கியம்; உங்கள் தீர்ப்பு—எங்கள் எதிர்காலம்,"

### சம்பத்-காங்கிரஸ் இரகசிய ஒப்பந்தம்?

திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்து பிரிந்து சம்பத் தமிழ் தேசியக் கட்சியை ஆரம்பித்தும் தி. மு. க. வைச் சேர்ந்த திரு தேவராசன தி. மு. கழகத்தில் இருந்து விலக்கி தமிழ்தேசிய கட்சியில் சேர்ந்தும், மீண்டும் மேயர் குசேலர் தேர்தலின் போது தமிழ் தேசிய கட்சியில் இருந்து பிரிந்து தி. மு. கழகத்தில் சேர்ந்ததும் தெரிந்ததே! இவர் சம்பத்பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார் அதில் கூறி இருப்பதாவது "சம்பத்தும், கண்ணதாசனும் காங்கிரஸ் பிரமுகர்களுடன் கூடி ரகசிய பேச்சு நடத்தினார்கள்! இந்த தேர்தலில் தமிழ் தேசியகட்சியினர் தி. மு. கழகத்தினரை எதிர்த்து பிரசாரம் செய்வது என்று முடிவு எடுத்துக் கொண்டார்கள். தமிழ் தேசியக் கட்சி தேர்தலில் தோற்றுவிடும் என்று தெரிந்தும் அவர்கள் இப்பொழுது தேர்தலில் நிற்கிறார்கள். சம்பத் தேர்தலில் தோற்றுவிட்டால், அவரை டில்லி மேல் (சட்ட) சபை மெம்பராக ஆக்குவதாகவும், கண்ணதாசனை தமிழ் நாடு மேல் (சட்ட) சபை மெம்பராக ஆக்குவதாகவும் காங்கிரஸ்காரர்கள் வாக்குகொடுத்து இருக்கிறார்கள் இருவருக்கும் பதவி கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் தி. மு. கழகத்திற்கு எதிர்ப் பிரசாரம் செய்கிறார்கள் இந்தத் தேர்தல் முடிந்த அன்றே தமிழ் தேசியக்கட்சி தமிழ் நாட்டில் இருந்து மறைந்து விடும் இவ்வாறு பழைய உதவி மேயர் தேவராசன் அந்த அறிக்கையில் கூறி இருக்கிறார்!

### வடசென்னையில் தமிழரசு ஆதரவு?

வட சென்னை தொகுதியில் இருந்து டில்லி சட்டசபைக்கு சோசலிஸ்டு தொழிலாளர் கட்சி தலைவர் அந்தோணிப் பிள்ளை போட்டி போடுகிறார் என்பது தெரிந்ததே அவருக்கு ஆதரவு கொடுப்பது என்று தமிழரசு கழகம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## ரூ. 100 அபராதம்

மாவிட்டபுரம், புதன்

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட ஏழரைப் போத்தல் வடி சாராயம் வைத்திருந்ததாக இணுவிலைச்சேர்ந்த கந்தன் ஆறுமுகம் என்பவர்மீது குற்றம்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸலி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்பக்கொண்டார்

நீதிபதி எதிரியை ரூபா 100 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

---

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, புதன்

சூரியகிரகண தோஷ நிவிர்த்திக்காகவும், நவக்கிரக தோஷ நிவிர்த்திக்காகவும் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தலைமை ஆசிரியை ஸ்ரீமதி மீனம்மா ஐயாத்துரை உரை நிகழ்த்தினர்.

இவ் வைபவம் சாவகச்சேரி சைவசமய வளர்ச்சிச்சங்க ஆதரவில் திரு. கே. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

---

## அடூலா

வாஷிங்டன், பெப் 7

காங்கோ பிரதமர் திரு. அடூலா, ஜனாதிபதி கென்னடியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு நியூயோர்க் திரும்பினர்.

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ வருடம் தை மாதம் 26-ந் தேதி (8-2-62) வியாழக்கிழமை முன்னிரவு 9-29 வரை சதுர்த்தி. அதன்பின் பஞ்சமி, நள்ளிரவு 1-39 வரை உத்தரட்டாதி. அதன் பின் ரேவதி. இன்று சித்த யோகமானதாலும் பணமுடக்கம் போன்றவற்றை செய்யவேண்டாம். நிதானமாக நடக்கவும்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத் தினத்தில் பிறந்தவர்களுக்கு விசேஷ பலன்களும், குடும்ப நலன்கள் பெருகும். துணைவருக்கு விசேஷ பதவிகள், மதிப்பு உயர்தல், பணவரவு ஆகியன காணப்படுகின்றன. உத்தியோகத்தில் இருப்போருக்கு மதிப்புயர்தலுடன் பதவி உயர்தலும் நல்ல இடங்களுக்கு இடமாற்றங்கள் நிகழ்தலும் காணப்படுகின்றன. பெண்களுக்கு வஸ்திராபரணலாபம், தன இலாபம், குடும்பநன்மை ஆகியன உள. இவர்கள் பெருமளவில் நலம் பெறுவர்.

அச்சுவினி: நற்செய்தி, வண்டி வாகன லாபம்.

பரணி; மனக்கவலை, வீண் கலகப் பேச்சு.

கார்த்திகை: பணவரவு, நற்செய்தி.

ரோகிணி: கடன்படல், வீண் பிரச்சினையில் தலையிடல்.

மிருகசீரிடம்: ஆடம்பரச் செலவு, நிதானமின்மை.

திருவாதிரை: சுகம்.

புனர்பூசம்: செலவதிகம், யோசனை, நிம்மதியீனம்.

பூசம்: தெய்வீக வழிபாடு, தார்மீக சிந்தனை.

ஆயிலியம்: உறவினர் கொண்டாட்டம், சுகம் இனசனவரவு

மகம்: குடும்ப வைத்தியச் செலவு, கவலை.

பூரம்: வித்தை விருத்தி, மேன்மைநிலை.

உத்தரம்: கல்வி மேன்மை சமூகத்தில் மதிப்பு, சுகம்.

அத்தம்: அனாவசியச் செலவு, மனச்சஞ்சலம்.

சித்திரை: சொத்துமூலம் பணவரவு, உறவினர் நன்மை.

சுவாதி: பொருள் நட்டம், பணக் கஷ்டம்.

விசாகம்: பணவசதி, வாகன விருத்தி.

அனுஷம்: வாகனக் கஷ்டம், பிரயாணக் கஷ்டம்.

கேட்டை: மாதுருவழிஉதவி, பணவரவு, சுகம்.

மூலம்: உறவினர் வருகை, மதிப்பு, சுகம்.

பூராடம்: தாயாதிகளால் கஷ்டம், செலவதிகம்.

உத்தராடம்: பணவரவு, இலாபம், சுகம்.

திருவோணம்: சபலசிந்தனை, ஊக்கமழுதல், சஞ்சலம்.

அவிட்டம்: நல்லோர் தரிசனம், விவாகப்பேச்சு, நன்மை.

சதயம்: முயற்சித் தடை, மனமடிவு, சஞ்சலம்.

பூரட்டாதி: சுகநலம், தொழிலாக்கம், பணவரவு.

உத்தரட்டாதி: கடும் உழைப்பு, ஊதியமின்மை, கவலை.

ரேவதி: மாதுருவழி ஊக்கம், மதிப்பு, சுகம்.

---

யாழ் அரசினர் ஆஸ்பத்திரி

## சிகிச்சை நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 12ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை கண்நோயாளர். பேறுகால கர்ப்பிணிகள் சிகிச்சை ஒழுங்கில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

முதல்யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையின் கண்சிகிச்சை நிலையத்தில் திங்கள் காலையில் நடத்தப்பட்டுவந்த சத்திரசிகிச் புதன்கிழமை காலையிலும்சாதாசை ரண சிகிச்சைஏனையநாட்களில் நடைபெறுமெனவும்,பேறுகால கர்ப்பிணிகளை திங்கள் செவ்வாய்க் கிழமைகளிலும், கர்ப்பப்பை சம்பந்தமான நோயாளரை வழமைபோல் வியாழக்கிழமையிலும் பார்வையிடப்பட்டு சிகிச்சைகொடுக்கப்படுமெனவும் ஏனைய நோயாளரின் சிகிச்சைகாலம் வழமைபோலவே நடைபெறுமெனவும் யாழ்ப்பாண வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

---

## முதன் மந்திரியின் மணி மயக்கம்

திருவனந்தபுரம், பெப். 7

கேரள முதன்மந்திரி ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளை கடிகாரத்தில் மணியைத் தவறாகப் பார்த்ததால், இரண்டு மணி நேரம் விமானநிலையத்தில் காத்திருக்கவேண்டி நேர்ந்தது காலை4-30மணியிருக்கும்போதே அதை 5-30 மணியென்று ஸ்ரீ பட்டம் நினைத்துக்கொண்டுவிட்டார். விமான நிலையத்தை அடைந்ததும் 5 அடிப்பதற்குப் பத்து நிமிஷம் இருந்தது. தற்காப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனனின் இந்திய விமானப் படைவிமானம் காலை6 மணிக்கு வரவேண்டியது. 6-50 மணிக்குதான் வந்தது. விமானம் வரும் வரை 70 வயது முதல் மந்திரி காத்திருந்து திரு. மேனனுக்கு மாலைபோட்டு வரவேற்றார்.

---


## உங்கள் நோய்

நரைபடுத்த உத்தரவாதம் கழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

# 3,349 ஸ்தானங்களுக்கு 14,604 அபேட்சகர்கள் போட்டி

## இந்திய பொதுத் தேர்தலுக்கு இன்னும் 9 நாட்களே பாக்கி

புதுடில்லி, பெப். 7

**உலகிலேயே மிகப் பெரும் இந்தியப் பொதுத் தேர்தல் ஆரம்பமாக இன்னும் 9 தினங்களே இருக்கின்றன. இத்தேர்தலில் 2855 ராஜ்ய சபை ஸ்தானங்களுக்கு 12,625 அபேட்சகர்களும், 494 லோக சபை ஸ்தானங்களுக்கு 1979 அபேசகர்களும் போட்டியிடுகின்றனர். அதாவது மொத்தம் 3349 ஸதானங்களுக்கு 14604 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.**

இந்தியாவிலுள்ள மொத்த ராஜ்ய சபை ஸ்தானங்கள் 3196 ஆகும். ஆனல் ஒரிஸா, கேரளம். ஜம்மு-காஷ்மீர் ஆகிய ராஜ்யங்களில் ஏற்கனவே இடைக் காலத் தேர்தல்கள் நடைபெற்றுவிட்டதனல் 2855 சட்ட சபை ஸ்தானங்களுக்கு மட்டுமே தேர்கல்கள் நடக்கும்.

சென்ற தேர்தலில் 2906 ராஜ்ய சபை ஸ்தானங்களுக்கு 10,793 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

ஏற்கனவே 13 அபேட்சகர்கள் ராஜ்ய சபைக்குப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுவிட்டனர். இவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியினராகும்.

இப்போதைய 2855 சட்ட சபை ஸ்தானங்களில் காங்கிரஸின் சார்பாக 2836 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர், பிரஜா சோஷலிஸ்ட 1070 ஸ்தானங்களிலும், ஜனசங்கம் 1065 ஸ்தானங்களிலும், சுதந்திராக் கட்சி 1031 ஸ்தானங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி 830 ஸ்தானங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 142 ஸ்தானங்களிலும் போட்டியிடுகின்றன.

## டிகால் அறிக்கை தேசியவாதிகள் வரவேற்பு

அல்ஜியர்ஸ், செப். 7

அல்ஜீரியா சம்பந்தமான ஜெனரல் டிகாலின் அறிக்கையை அல்ஜீரிய தேசியவாதிகள் வரவேற்றிருக்கின்றனர். தற்போதைய நிலைமையை ஆராய்ந்தபின் சில முடிவுகளை தேசியவாதிகள் மேற்கொண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## ருமேனிய தூதர்

கொழும்பு, புதன்

இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ருமேனியத் தூதர், தனது நியமனப் பத்திரங்களை நேற்று கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார்.

## கட்டு மீறிச் சென்ற யானை இருவரைக் கீழே விழ்த்தியது

இரத்தினபுரி, புதன்

அஷ்ட கிரக சேர்க்கையினல் ஏற்படக்கூடிய தீமைகளைத் தடுக்குமுகமாக பெல்மதுலை விகாரையில் நடைபெற்ற உற்சவ ஊர்வலத்தில் கலந்துகொண்ட பெண் யானை ஒன்று அத்துமீறிச் சென்று பலருக்குக் காயம் ஏற்படுத்தியது.

இரண்டுபேர்களை ஏற்றிக்கொண்டு இந்த யானை ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தது. மேளச் சத்தத்தினல் மருண்ட யானை, அங்குமிங்கும் ஓட ஆரம்பித்துவிட்டது. யானை மீது இருந்தவர்களில் ஒருவர் கீழே விழுந்து காயமடைந்தார். யானை அங்குமிங்குமாக ஓடிச் செல்லுகையில் யானையில் பிடித்துத் தொங்கியபடியே மற்ெருருவர் இருந்தார். கடைசியாக ஒரு மரத்தை முறித்துவிட்டு யானை அவரையும் கீழே தள்விட்டது. அவர் காயமெதுவுமின்றித் தப்பிக்கொண்டார். யானைப்பாகன் ஒருவாறு யானையை அடக்கினர்.

## காரினல் மோதப்பட்டு இருவர் மரணம்
### சாரதி கைது

கொழும்பு, புதன்

வட்டுவவையைச் சேர்ந்த எம். எச். டெனல்ட் எட்வின் விஜேசிரி (வயது 51) என்னும் ஆயுள்வேத வைத்தியரும், அதே இடத்தைச் சேர்ந்த செசிலின் நோன (வயது 50) என்னும் பெண்ணும் காலி வீதியில் நடந்துகொண்டிருக்கையில் கார் ஒன்றினல் மோதுப்பட்டு மரணமானர்கள்.

குடிபோதையில் ஒருவர் தமது காரை அதி வேகமாகச் செலுத்திச் சென்றதால் மேற்படிவிபத்து சம்பவித்ததாக நம்பப்படுகிறது. செசிலின் நோன பாணந்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானர். விஜேசிறி கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, மரணமானர். செசிலின் நோன இரு பெண் குழந்தைகளுக்கு தாயாராவார். பாணந்துறை மரண விசாரணை அதிகாரி திரு. எம். டி. எஸ். ஜயவர்த்தனவிடம் செசிலின் நோனவின் மகள் குசுமாவதி (வயது 22) சாட்சியமளிக்கையில், தானும் தனது தாயாரும் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்ததாகவும், வழியில் தமக்குத் தெரிந்த விஜேசிரியுடன் தமது தாயார் பேசிக்கொண்டு நின்றதாயும், விரைந்துவந்த கார் ஒன்று அவர்கள் மீது மோதியதாயும் கூறினர்.

மிகாமுவாகே என்னும் ஒருவர், சம்பவம் நிகழ்ந்த இடத்தில் தாம் நின்றதாகவும் மோதிய காரின் சாரதியுடன் பேசியபோது அவர் குடிபோதையுற்றிருந்ததாகக் கண்டதாகவும் சாட்சியமளித்தார்.

கல்கிசையைச் சேர்ந்த ரெனல்ட் அன்ரன் (வயது 27) என்னும் கார் சாரதியை விபத்து சம்பந்தமாக வட்டுவைப் பொலிஸ் கைது செய்துள்ளது.

## மாப்பிள்ளைத் தோழரின் அவதி

இரத்தினபுரி, புதன்

இரத்தினபுரியில் நடைபெறவிருந்த கலியாணமொன்றுக்கு மாப்பிள்ளைத் தோழனகச் செல்லவிருந்த வாலிபர் ஒருவர், கண்டியிலிருந்து இரத்தினபுரிக்கு ரயிலில் பிரயாணமானர். மாப்பிள்ளைத் தோழனுக்கான புதிய அழகான சூட் ஒன்றையும் தைப்பித்துத் தமது 'சூட்கேஸில்' எடுத்துச் சென்றர்

கலியாண தினத்தன்று ஆயத்தஞ் செய்துகொண்டு உடையை அணிவதற்கு 'சூட்கேஸை'த் திறந்தபோது, அதனுள் பெண்களின் ரவிக்கைகளும் ஏனைய உடைகளும் இருக்கக்கண்டு திடுக்கிட்டார். தமது உடையைக் காணதகால் அவரால் மாப்பிள்ளைத் தோழனக இருக்கமுடியாது போகவே தோழனில்லாமலே கலியாணம் நடைபெற்றது.

பிரஸ்தாப வாலிபர் பிரயாணஞ்செய்த ரயில் பெட்டியில் பல பெண்களும் பிரயாணம் செய்தனர். ரயிலில் ஏறியதும் வாலிபர் ஒரு மூலையில் தூங்க ஆரம்பித்துவிட்டார். அவர்களில் ஒரு பெண் வாலிபரின் பெட்டியை மாறி எடுத்துச் சென்றிருக்கவேண்டும்!

## நேருவை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யுமாறு கோரிக்கை
### மயிலிட்டி கிராமசபை தீர்மானம்

மாவிட்டபுரம், புதன்

மயிலிட்டிக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டம், தலைவர் திரு. ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இவ்வருடம் சுகாதார மந்திரியின் அழைப்பை ஏற்று ஆயுள்வேத வைத்தியசாலையைத் திறந்துவைக்க வரும் இந்தியப் பிரதமர் நேருவை இதற்கு முந்திய தடவைகள் யாழ்ப்பாணத்தை ஒதுக்கிவைத்ததுபோல் இம்முறையும் ஒதுக்கிவைக்காமல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் அக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஸ்தலஸ்தாபனங்களை புதிதாக அமைப்பதற்கும் அவற்றைக் கலைப்பதற்கும் அரசாங்கம் ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கு அதிகாரம் வழங்கியதையிட்டு இச்சபை அரசாங்கத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் தீர்மானமொன்றையும் நிறைவேற்றியுள்ளது.

மரண தண்டனை விசேடமசோதாவை கண்டிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாலாவி, மயிலிட்டி வடக்கு, கட்டுவன் ஆகிய இடங்களில் வீடு அமைப்புத் திட்டங்களை அரம்பிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் மற்ருேர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## டாக்காவில் பொலிஸ்-மாணவர் மோதல்
### 12 பேருக்கு காயம்

டாக்கா, பெப். 7

**டாக்கா பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே இங்கு நடைபெற்ற கைகலப்பில் 7 மாணவர்கள் காயமடைந்தனர். பலத்த தடியடியின்காரணமாக அவர்களில் ஒரு மாணவர் படுகாயமடைந்தார்.**

மாணவர்களின் கடுமையான கல்வீச்சின் காரணமாக 5 பொலிசார் காயமடைந்தனர். துருப்புக்கள் மூன்று தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தற்போது டாக்கா வந்திருக்கிறர். அவர் தங்கியிருக்கும் கவர்னர் மாளிகையை நோக்கி மாணவர்கள் செல்ல முயன்றபோது தடுக்கப்பட்டனர். நகரில், இப்போது துருப்புக்கள் நிலைகொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீமதி பண்டிட்

கொழும்பு, புதன்

திருமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கு 'ரோயல் காமன்வெல்த்' சங்கம் கால்பேஸ் ஹோட்டலில் வருகிற 19-ம் திகதியன்று ஒரு விருந்துபசாரம் நடத்தவிருக்கிறது.

பல்கலைக்கழக மாதர் சம்மேளனத்தின் 'கலந்துரையாடல்' ஒன்றில் கலந்துகொள்வதற்கு திருமதி விஜயலட்சுமி இலங்கை வருகிறர். தொடர்ந்து இரு தினங்களாக நடைபெறவிருக்கும் இந்தக் கலந்துரையாடல் பெப்ரவரி 17-ம் திகதி யன்று மகா தேசாதிபதியினல் ஆரம்பித்துவைக்கப்படும்.

'பொதுமக்கள் வாழ்க்கையில் பட்டதாரிப் பெண்கள் பங்கு' என்னும் பொருள்பற்றித் திருமதி விஜயலட்சுமி ஒரு சொற்பொழிவாற்றுவார் எனத் தெரிகிறது.

## இலங்கை எஞ்ஜினியர்பற்றி எம். பி. கருத்து

இரத்தினபுரி, புதன்

"சோவியத் யூனியனிலுள்ள என்ஜினியரிங் மாணவர்கள், பயிற்சிமுறைகள்மூலம் கற்கிருர்கள். ஆனல், இலங்கையிலுள்ள சில என்ஜினியர்மாருக்கு கொங்கிறீற்றை எப்படிக கலக்குவதென்றே தெரியாது" என்று பதக்கட அரசினர் கல்லூரியின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்த கல்வி மந்திரியின் பார்லிமெண்ட் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்தின கூறினர்.

நிவித்தியகல எம். பி. திரு. ஸ்ரான்லி மொலிகொட பேசுகையில் ஏழை மக்களுக்கு உதவும்பொருட்டே தாம் பார்லிமெண்டுக்குச் சென்றதாகக் கூறினர்.

## ஜெர்மனியரின் குதூகல 'கார்னிவல்'
### பேர்லினில் குறுக்குச்சுவர் ஏற்பட்டதால் நடக்கவில்லை

கோலோன் (டாட்(பெப் 6

ஜெர்மனியர்கள் ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 6ந் திகதி "கார்னிவல்" எனப்படும் குதூகல விழாவைக் கொண்டாடுவது வழக்கம். அம் மகிழ்ச்சித் திருநாளில் எல்லாரும் தங்கள் கவலைகளை மறந்து பெரியவர்கள், சிறுவர்கள், எஜமானர்கள், தொழிலாளிகள் ஆகிய பேதங்களை மறந்து, குஷியாக இருப்பர். மாறு வேடங்கள் அணிந்து பெரிய பெரிய பொம்மை முகங்களைத் தூக்கிக்கொண்டு மாபெரும் ஊர்வலம் நடத்துவர்.

ஜெர்மனியர்களில் கத்தோலிக்கர்கள்தான் இவ்விழாவைக் கொண்டாட ஆரம்பித்தனர். மாதாகோவிலில் வருஷம் ஆரம்பமாவதையொட்டியே இவ்விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை நாளடைவில் எல்லா ஜெர்மனியர்களுமே கொண்டாட ஆரம்பித்துவிட்டனர்.

ஜனவரி 6ந் திகதி ஆரம்பமாகி இவ்விழா சில நாட்கள் தொடர்ந்து நடைபெறும். சில நகரங்களில் ராஜாக்கள் போல பலர் வேடம் போட்டு நிர்வாகத்தை நடத்துவதாக நடிப்பர். விழாவில் நடைபெறும் ஊர்வலங்கள் மிக நீளமுள்ளதாக இருக்கும் இதற்கான செலவுகளை அனுமதிக்க நகர நிர்வாகங்களே முன்வருகின்றன. ஊர்வலத்தின் நடு மையத்தில் "கார்னிவலின் இளவரசன்" ஒரு அழகிய ரதத்தில் பவனி வருவான். இவன் புஷ்பங்கள், பழங்கள், மிட்டாய்கள் ஆகியவைகளை கூட்டத்தினரிடையே வீசி எறிந்துவழங்கி வருவான்.

இவ்வருஷம் இந்த மகிழ்ச்சிகரமான விழா பெர்லின் இரு கூறுக்கப்பட்டதையொட்டி நடைபெறவில்லை. இவ்விழாவுக்காக செலவிடப்படவிருந்த தொகை பெர்லின் நலனுக்காகச் செலவிடப்படும். பெர்லினை இரு பிரிவாகச் செய்ததுமேற்கு ஜெர்மனியர்கள் ஒவ்வொருவரையும் பாதித்துள்ளது.

குறுக்குச் சுவர் ஏற்பட்டது இரு பகுதியில் உள்ள உறவினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசவும் முடியாமல் செய்து விட்டது. 'கார்னிவல்' விழாவின் நோக்கம், பேய் பிசாசுகள் ஆகியவைகளை விரட்டுவதற்காகவே நடத்தப்படுவதாகும்.

## பழங்கால வயலின் 17,250 பவுணுக்கு வாங்கப்பட்டது!

கிறிமோனியா (வட இத்தாலி) பெப். 6

கிறிமோனியாவைச் சேர்ந்த அன்ரனியோ ஸ்ரடிவறி என்பவரினல் சுமார் 250 வருடகாலத்துக்கு முன்னர் செய்யப்பட்ட ஒரு வயலின், லண்டனிலிருந்து இத்தாலிக்கு திரும்ப அழைக்கப்பட்டு, கிறிமோனியா என்ற இடத்தில் நேற்றிரவு நடைபெற்ற வைபவமொன்றில் வாசிக்கப்பட்டது.

ஸ்ரடிவறியினல் செய்யப்பட்ட 540 வயலின்களில் ஒன்று கிறிமோனியா நகரத்தில் இருக்கவேண்டும் என்று சம்பந்தபப்பட்ட அதிகாரிகளின் முடிவுக்கிணங்க, இந்த வயலின் லண்டனில்சுமார்17,250பவுண்களுக்கு வாங்கப்பட்டு, கிறிமோனியா நகர மேயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மேற்கிந்திய சம்மேளனம்

லண்டன், பெப். 7

மேற்கிந்திய சம்மேளனம் கலைக்கப்பட்டுவிட்டது. ஜமாய்க்கா இந்தக் கூட்டத்திலிருந்து விலகியதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

## மணி வாக்கு

'கல்வியின் இலட்சியம் நல்ல காரியங்களைச் செய்யக் கற்றுக் கொடுப்பதன்று. நல்ல காரியங்களைச் செய்வதில் ஆசையும் ஆனந்தமும் உண்டாக்குவதேயாகும்.'

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு
தை மீ 26உ (8-2-62)

## ஜி. ஸி. ஈ. குழப்பம்

ஜீ. ஸி. ஈ. பரீட்சைகள் சம்பந்தமாகக் கல்வி இலாகா திட்டவட்டமான முடிவுகளைச் செய்யாதிருப்பது ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர் ஆகியோருக்கு மிகுந்த குழப்பத்தை உண்டாக்கியிருக்கின்றது. இப்பரீட்சை இலங்கைப் பள்ளிக்கூடங்களில் ஒரு வரம்பாக அமைந்திருப்பதுடன் உயர் தரப்படிப்புக்கு வழிவகுக்க இது ஓர் அளவு கோலாகவும் கருதபபடுகின்றது. இவ்வளவு பொறுப்புள்ள ஒரு பரீட்சைக்கு வரையறையான திட்டம் எதுவும் இதுவரை வகுக்கப்படாதிருப்பது மாணவர்களின் துரதிருஷ்டமேயாகும்.

ஜி. ஸி. ஈ. வகுப்புகளில் மாணவர்கள் எவ்வளவு காலம் இருக்கலாம், எத்தனை பாடங்களைப் பரீட்சைக்கு எடுக்கலாம் என்பன பற்றியும் வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் கல்வி அமைச்சர் பிரபல கல்லூரி அதிபர்கள் சிலருடன் சென்ற செவ்வாய்க்கிழமை ஒரு மகாநாடு நடத்தியுள்ளார். இம் மகாநாட்டில் முக்கியமான அம்சங்களில் முடிவுகள் ஏற்பட்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பதினறுவயதுக்குக் குறைந்த மாணவர்களையும் ஜி. ஸி. ஈ. டிசம்பர் பரீட்சைக்கு இருமுறை எழுதாத மாணவர்களையும் பள்ளிக்கூடங்களிலிருந்து நீக்கக் கூடாதெனக் கல்வி இலாகா சமீபத்தில் முடிவு செய்தது. இதுசம்பந்தமாகவும் கல்வி அமைச்சர், கல்லூரி அதிபர்களுடன் கலந்தாலோசித்துள்ளார்.

இந்த மாதிரியான ஒரு மகாநாட்டை விரிவான அடிப்படையில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் கல்வி இலாகா ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஜி. ஸி. ஈ. பரீட்சை புகுத்தப்பட்ட காலத்திலேயே அதற்கான பாடத் திட்டங்களை ஆற அமர ஆராய்ந்து தீர்மானித்திருக்கவேண்டும். காலங்கடந்த பின்னர் காரியங்களைச் செவ்வனே செய்வது மிகவும் சிரமமாகும். வருங்காலத்தில் நல்ல சந்ததிகளை உருவாக்குவதற்குத் தரமான கல்வித் திட்டம் பெரிதும் உதவுகின்றது. நாட்டின் பொருளாதார அமைப்புக்கும் கல்வித் திட்டமே அடித்தளமாக அமைவதால் கல்வியைப் பொறுத்தவரை அரசாங்கம் நினைத்தவாறெல்லாம் முடிபுகளைச் செய்வது மாணவர்களின் எதிர்காலத்துக்கும், பல்கலைக்கழகப் படிப்புக்கும் குந்தகம் விளைவிப்பதாகும்.

கல்வி விஷயத்தில் அனுபவமும், ஆராய்வும், திட்டவட்டமான முடிபுகளும் அவசியமென்பதை காந்திஜியும் தெரிவித்திருக்கின்றார். மாணவர்களினதும் நாட்டினதும் எதிர்காலத்தை உளத்திற்கொண்டே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எந்த நாட்டுக்கும் காந்திஜியின் இக் கருத்துப் பொருத்தமானதே.

கல்வித் துறையில் இன்று ஏற்பட்டுள்ள குழப்பமான நிலையை நீக்குவதற்கு கல்லூரி அதிபர்களின் மகாநாடு கல்வி அமைச்சருக்கு உதவியிருக்குமானால், நடைமுறையில் நிற்கும் மாணவர்கள் கல்வி பற்றிய எதிர்கால முடிவுகளைச் செய்வதற்கு உதவி புரிவதாய் இருக்கும். வாழ்க்கையில் எத்துறையில் தாங்கள் முன்னேறலாம் என்பதற்கும் இது வழிகாட்ட வேண்டும்.

## வீடமைப்புத் திட்டம்

ஆசிரியர்களுக்கு அரசாங்கம் வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமெனத் தேசிய கல்வி கமிஷன் சிபார்சு செய்துள்ளது. இதனைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு உபகுழுவை நியமிப்பதெனவும் கமிஷன் தீர்மானித்திருக்கின்றது.

பள்ளிக்கூடங்களுக்கு அணித்தாக ஆசிரியர்களுக்கு வீடுகள் கிடைக்குமாயின் அதனல் ஆசிரியர்கள் மாத்திரமன்றி மாணவர்களும் பயனடைவார்கள். அதிக தூரத்திலிருந்து பள்ளிக்கூடங்களுக்கு பஸ், கார் ரயில் மூலம் பிரயாணம் செய்யும் ஆசிரியர்களுக்கு இதனல் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதுடன், அருமையான நேரத்தையும் வீணே கழிக்கின்றனர். பள்ளிக்கூடங்களுக்குச் சமீபத்தில் வீடுகள் கிடைக்குமானல் பிரயாணப் பிரச்சினையே இல்லாது போய்விடுகின்றது. இதனல் ஆசிரியர்கள் குறித்த நேரத்துக்குப் பள்ளிக்கூடத்துக்குச் செல்வது சாத்தியமாவதுடன் பள்ளிக்கூடத்துடன் தொடர்புடைய வெளி வேலைகளிலும் கவனம் செலுத்துவதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் கிடைக்கின்றது.

ஆசிரியர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட்டத்தால் ஏற்படும் செலவை அவர்களின் வீட்டு வாடகைப் பணத்தைக் கழித்துக்கொள்வதன் மூலம் சமாளித்துவிடலாம் என கமிஷன் யோசனை கூறியுள்ளது. இவற்றை எல்லாம் உபகுழு பரிசீலனை செய்து இத்திட்டத்தைச் செயற்படுத்துமென எதிர்பார்க்கின்றோம்.

# சீனவின் கிராம ஆட்சி புனரமைப்பு

(யூ பிங் பான்)

கடந்த கோடைக் காலத்தில் இருந்து தங்கள் கஷ்டங்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று சீன உழவர்கள் உணர்ந்து வருகின்றனர். உழவர்களின் துயரினல் ஏற்படும் அபாயத்தை மாசேதுங்கும் அவரது தோழர்களும் உணர்ந்துள்ள போதிலும், கிராமப்புற ஆட்சிக் குழு முறையை புனரமைப்புச் செய்யும் அவர்களது திட்டம் அரசியல், பொருளாதார கொள்கை ஆகியவற்றில் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

உணவுப் பற்றுக் குறையைப் போக்க 1958—62ன் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிற் துறைக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை விவசாயத்துறைக்கு அளிக்க வேண்டும். கடந்த ஜனவரி 20 ல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், கிராம மக்களின் ஆட்சிக்குழுக்களைப் புனரமைப்புச் செய்வதற்கான கீழ்க்கண்ட அடிபபடைக் கொள்கைகளை வெளியிடப்பட்டுள்ளன:

சமத்துவ மதிப்பைப் பரிமாறிக் கொள்ளும் சோஷலிஸ சமுதாயக் கொள்கை. 2. உற்பத்திக்குத் தகுந்த வருமானம். 3. தனிப்பட்ட குடிசைத் தொழில்களின் அபிவிருத்தி. 4. சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள மார்க்கெட்டுகளை விஸ்தரிப்பது. 5. உற்பத்தி அணியுடன்கூடிய மூன்று வித உடமைத்துவம்.

கடந்த ஒன்பது மாதங்களாக தொழிற்துறையிலிருந்து விவசாயத் துறைக்கு அரசினர் தங்களுடைய கவனத்தைத் திருப்பியுள்ளனர். விவசாயப் பிரதேசங்களுக்கு மனித சக்தியைக் கொண்டு [illegible] வதற்கு எல்லா வகையான முறைகளையும் ஆட்சி பயன்படுத்துகிறது. நகர்ப்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ரேஷன் குறைக்கப்பட்டது. அதே சமயத்தில் கிராமப்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ரேஷன் அதிகரிக்கப் பட்டது. அனுபவ அறிவு பெறுவதற்காக ஆயிரக்கணக்கான இடைநிலைப் பள்ளிக்கூட மாணவர்கள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

நாளடைவில் சிறு தொழிற்சாலைகளும் தொழில் நுணுக்கம் தெரியாத சாதாரண பாட்டாளிகளும் கிராமப் புறங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனல் சீனவில் 65 கோடி மக்களுக்குப் போதிய உணவு அளிகக விவசாயத் துறைக்கு இன்னும் ஏராளமான தொழிலாளர்கள் தேவை. கிராமப்புற ஆட்சிக்குழு முறையைப் புனரமைப்புச் செய்யுமாறு அரசாங்கம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

மத்திய கமிட்டியில் அறிவிக்கப்பட்ட புனரமைப்புக் கொள்கைக்கு ஏற்ப, துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அண்மையில் கிடைத்த தகவல் கூறுகின்றன. உற்பத்தித் திட்டங்கள் வியாபார நிர்வாகம், மனித சக்தி ஒதுக்கீடு, பிராணிகள் ஆகியவற்றின் மீதிலான ஆதிக்கம் கிராம ஆட்சிக்குழுக்களிடமிருந்து அந்தந்தக் கூட்டுறவு நிறுவனங்களிடம் மாற்றி விடப்பட்டுள்ளன.

# புற்றுநோயை குணப்படுத்த புதுமுறை

## புரட்சிகரமான வைத்திய சாதனை

"லூகேமியா" எனப்படும் இரததத்தில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்த வைத்தியத்துறையில் நீண்ட காலமாகவே பெருமுயற்சிகளும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வியாதி உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகும். மெயின்ஸ் நகரப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஈ. கொரிந்த் இதற்கான ஒரு சுலப வைத்திய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். இதனல், வியாதி மிக மோசமான அளவுக்கு முற்றியிருந்தாலும் குணப்படுத்த முடியுமாம். இதை அவரே தன்னுடைய சகாக்களுக்கு ஒரு மகாநாட்டில் விளக்கினர்.

இவர், இதற்காக உபயோகிக்கும் "இன்செக்ஷன்" கருவியின் ஊசி மார்புப் பகுதியிலுள்ள ஸ்டிரெனம் என்ற எலும்பினில் ஊடுருவிச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட பகுதியை அகற்றி வியாதியை எப்படிக் குணப்படுத்த முடிகிறது என்பதை செய்தே காட்டினர். இம் முறைமூலம் பல வியாதியஸ்தர்களை அவர் குணப்படுத்தியிருக்கிறார்.

### ஆபத்தில்லை

இப் புதுமுறை மற்ற சிகிச்சை முறைகளை நடத்தி பலனின்றிப் போனல் கடைசியாக உபயோகிக்கப்படுகிறது. "லூகேமியா" என்ற வியாதியில் பலவிதங்களுண்டு. எலும்புக்குள் இருக்கும் "மாரோ" என்ற பொருள் இந் நோய்காரணமாகப் பாதிக்கப்படுகிறது. டாக்டர் கொரிந்தின் சிகிச்சை முறையின்படி இந்த பாதிக்கப்பட்ட "மாரோ"வை முதலில் அகற்ற வேண்டும். இதற்கு "கமோதெராபி" முறை அனுசரிக்கப்படுகிறது. இதற்குப் பின்தான் அகற்றப்பட்ட "மாரோவுக்குப் பதில் புது "மாரோ"வை இன்செக்ஷன் மூலம் செலுத்துவது கையாளப்படுகிறது. இச் சிகிச்சை நடைபெற்ற சில நாட்களுக்குள் வியாதியஸ்தர்கள் பூரணமாகக் குணமடைந்து விடுகின்றனர். டாக்டர் கொரிந்தின் சிகிச்சை முறையினல் ஆபத்து ஏற்படுவதற்கில்லை. அமெரிக்காவில், பாதிக்கப்பட்ட "கிட்னி" எனப்படும் மூத்திரக் காய்கள் அகற்றப்பட்டு வேறு அமைக்கப்பட்டன என்ற செய்தியைக் கேட்டே டாக்டர் கொரிந்த் இம்முறையைக் கண்டுபிடித்தார். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஒரு அணுவால் விபத்து ஏற்பட்டதில் 6 யூகோ விஞ்ஞானிகள் கதிரியக்க ஆபத்தினல் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அப்போதுதான் இம் முறையை உபயோகித்துப் பார்ப்பது என்ற முடிவு செய்யப்பட்டது. டாக்டர் மேதி என்ற பிரெஞ்சு நிபுணர் எலும்பிலுள்ள "மாரோ"வில் இன்செக்ஷன் செய்ததின் மூலம் இந்த 6 பேர்களில் 5 பேர்களைக் காப்பாற்றிவிட்டார்.

டாக்டர் கொரிந்தின் முறை மூலம் "லூகேமியா" வியாதியுள்ளவர்கள் மட்டுமின்றி கதிரியக்கத்தினல் பாதிக்கப்பட்டவர்களையும் சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும் என்று தெரிய வந்துள்ளது.

இந்த ஜெர்மன் நிபுணரின் முறை மிக புரட்சிகரமானது என்று உலக வைத்திய நிபுணர்கள் எல்லாருமே பாராட்டுகின்றனர். லூகேமியா வியாதி ஏற்பட்டால் இவர்கள் மரணமடைய வேண்டியதே என்ற நிலைமை மாறி அவர்களைக் குணப்படுத்தமுடியும் என்பதற்கான வழியை டாக்டர் கொரிந்த் கண்டுபிடித்துவிட்டார்.

## 2வது மட்பாண்ட தொழிற்சாலை

கொழும்பு, புதன்

பொரலஸ்கமுவாவில் புதிதாக ஒரு மட்பாண்ட உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது, இலங்கையில் இதுவே இரண்டாவது மட்பாண்ட உற்பத்தித் தொழிற்சாலை. 70 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படும். ஒரு வருடகாலத்தில் 2,400 தொன் எடையளவு பாத்திரங்களை இந்தத் தொழிற்சாலை உற்பத்திசெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிலி விளைவித்த புலி பிடிபட்டது

மாத்தளை, புதன்

ஹரஸ்கம என்ற கிராமத்தில் நாய்கள், ஆடுகள், கோழிகள், இதர பிராணிகள் ஆகியவற்றைக் கொன்று பீதியை விளைவித்துவந்த ஒரு புலி பிடிககப்பட்டது. மிருகக் காட்சிசாலைக்கு அதை அனுப்ப மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

## அநுராதபுரம் நகரசபை தேர்தல்

### இன்னும் நியமன பத்திரம் இல்லை

அநுராதபுரம், புதன்

அநுராதபுரம் நகரசபை இடைத்தேர்தலுக்குநியமனபத்திரம் வழங்கும்கடைசித் திகதி பெப்ரவரி 21 எனக் குறிக்கப்பட்டுள்ளபோதும், எவரும் மனுப்பத்திரங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவில்லை. இடைத் தேர்தலில் நிற்பதற்கான தமது அபேட்சகர்களை ஒரு கட்சியும் இன்னும் தேர்ந்தெடுத்தாகவில்லை.

இடைத் தேர்தல் அபேட்சகர் சம்பந்தமாக ஆலோசிப்பதற்கு தமது கட்சியின் செயல் கமிட்டி வெகு விரைவில் கூடவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா கூறியுள்ளார். வெளிமடை, மூதூர் இடைத் தேர்தல்கள் சம்பந்தமாகவும் செயல் கமிட்டி ஆலோசனை செய்யும்.

அநுராதபுரம் நகரசபை இடைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் பற்றி ஆலோசிப்பதற்கு இன்னும் காலமிருப்பதாகக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் கூறியுள்ளார்.

ஜாதிக்க விமுக்தி பெரமுன தன்து அபேட்சகரை அடுத்த வாரம் தேர்ந்தெடுக்கும் எனக் கட்சித் தலைவர் திரு. கே. எம். பி, ராஜரத்ன கூறியுள்ளார்.

எல். எஸ். எஸ். பியும் அடுத்த வாரம் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கவிருக்கிறது. சுதந்திரக்கட்சி, எம். ஈ பி. ஆகியவையும் தமது அபேட்சகர்களை இன்னும் தேர்ந்தெடுக்கவில்லை.

## வழக்கறிஞர்கள் சட்ட அபிப்பிராயம் ஆலோசிக்கப்படும்

### நாளை மாநகரசபைக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

புதிய சந்தைஒப்பந்தம் சம்பந்தமாக கொழும்பு வழக்கறிஞர்களான திரு. சி. இரங்கநாதன், எச் வி. பெரேரா ஆகியோரிடமிருந்து பெற்ற சட்ட அபிப்பிராயமும் இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

மின்சார என்ஜினியர் பதவியை இல்லாமல் செய்வது சம்பந்தமாக உள்ளூராட்சிச் சேவைக் கமிஷனிடமிருந்து வந்த கடிதமும் ஆலோசிக்கப் படவிருக்கிறது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் களியாட்ட விழாக்களுக்கு உத்தரவுச் சீட்டு வழங்கக்கூடாது. மாணவர்களுக்கு மாநகரசபை, இலவசப் புத்தகங்கள் வழங்கவேண்டும். மரணதண்டனை திருத்தி மசோதாவை வாபஸ் பெறவேண்டும். ஏழாம் வட்டாரத்திலுள்ள சங்கிலியன் மன்றத்தை சனசமூக நிலையமாக்கி நன்கொடைப் பணம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் பிரேரணைகளும் இக் கூட்டத்தில் கொண்டு வரப்படவிருக்கின்றன.

## 1961-ம் ஆண்டு பிரிட்டனில் குடியேறியவர்கள்

லண்டன், பெப். 7

1961-ல் பிரிட்டனில் குடியேறியுள்ள சாம்ராஜ்ய நாட்டு மக்களின் எண்ணிக்கை 1,60,000 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1960-ம் ஆண்டு சுமார் 80,000 பேர் குடியேறியதாய் அறிவிக்கப்படுகிறது

# மாஜி சிறைக் கைதிகளுக்கு வேலை தேடிக்கொடுத்தல்

## பெரும் பிரச்சினையாய் உள்ளதாம்

கொழும்பு, புதன்

சிறைக் கைதிகள் நலன் பாதுகாப்பு சங்கமும், சிறை இலாகாவும் பெரிதும் முயன்று வந்தபோதும் மாஜி சிறைக் கைதிகளுக்கு வேலை தேடிக் கொடுப்பது பெரும் பிரச்சினையாகவே இருந்துவருகின்றது எனச் சிறைக் கைதிகள் நலன் பாதுகாப்புச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாஜிக் கைதிகளுக்குத் திரும்பவும் வேலை தேடிக்கொடுப்பதற்கான வசதிகள்பற்றி ஆராய்வதற்கு சங்கத்தின் மத்திய கமிட்டித் தலைவர் உள்நாட்டமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவை வெகு விரைவில்சந்திப்பார்.

காஷியர் வேலையிலிருந்து திருட்டுக் குற்றத்திஞல் கைது செய்யப்பட்டவரைத் திரும்பவும் அதே வேலையில் அமர்த்த முடியாது.

மாஜிக் கைதிகள் 15 பேருக்குச் சென்ற வருடம் சங்கம் திரும்பவும் வேலை தேடிக் கொடுத்தது 40 பேரை வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு வழி செய்தது. 362 கைதிகளில் நம்பியிருந்த குடும்பத்தவருக்கு சம்பளம் பெற்றுக்கொடுப்பதற்கும் சங்கம் வழிதேடிக் கொடுத்தது.

கிரிக்கெட்

## 3-வது 'டெஸ்ட்' வெற்றியின் முடிவு

கராச்சி, பெப். 7

கராச்சியில் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இங்கிலாந்துக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மூன்ருவதும் இறுதியானதுமான கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டி எவருக்கும் வெற்றியின்றி முடிவடைந்தது.

மூன்ருவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான இன்று பாகிஸதான் தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்ட நேர முடிவுவரை எட்டு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 404 ரன்கள் எடுத்தது. முதலாவது இன்னிங்சில் பாகிஸதான் 253 ரன்கள் எடுத்திருந்தது. இங்கிலாந்துக் கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 507 ரன்கள் எடுத்திருந்தது.

பாகிஸதானுக்கும் இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் லாகூரில் நடந்த முதலாவது 'டெஸட்' போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. டாக்காவில் நடந்த இரண்டாவது டெஸட் போட்டி எவருக்கும் வெற்றியின்றி முடிந்தது ஒரு டெஸட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றதால் இப்போட்டியில் இங்கிலாந்துக்கே வெற்றி கிடைத்துள்ளது.

## அமெரிக்காவின் உணவு உதவித் திட்டம்

ஹாங்கொங், பெப். 6

உலக சமாதானத்தைத் தேடும் வகையில் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களைப் பிற நாடுகளுக்கு உதவுயதே அமெரிக்க சமாதான உணவு உதவித்திட்டத்தின் குறிக்கோளாகும் என அத்திட்டத்தின் டைரக்டர் திரு. ஜோர்ஜ் மக்கோவன் கூறியுள்ளார். ஹாங்கொங்கில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் உணவு உதவித் திட்டம்பற்றி டைரக்டர் விரிவாக எடுத்துக் கூறினர்.

கம்யூனிஸ்ட் சீனவிலுள்ள மக்களுக்கும் அமெரிக்கா உணவுப் பொருளுதவுமா என்று பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்டபோது, அப்படி சீன கேட்டுக்கொள்ளுமாஞல் அமெரிக்கா தாராளமாக அதை வரவேற்கும் என திரு. மக்கோவன் பதிலளித்தார். ஆனல் கம்யூனிஸ்ட் சீன இப்படியான உதவி கோரியதாக இதுவரை தெரியவில்லை எனவும் அவர் கூறினர். குறிக்கப்பட்ட கோரிக்கையொன்றின் பேரிலல்லாது அமெரிக்காமேலதிகமாக மிஞ்சியுள்ள உணவுப் பொருள்களை எந்த நாட்டுக்கும் வழங்கவில்லை.

உணவு உதவித் திட்டத்தை வருங்காலத்தில் அதிக உபயோகமுள்ளதாக்குவதற்குத் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என ஜஞதிபதி கென்னடி கூறியுள்ளார்.

இப்போது ஹாங்கொங் வந்துள்ள திரு. ஜோர்ஜ் மக்கோவன் இந்தியாவுக்கும் ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்கும் விஜயம் செய்வார்.

## சமஸ்கிருத பரீட்சைகள்

தெல்லிப்பழை, புதன்

அகில உலக சமஸ்கிருத விஸவபரிஷத்தின் ஆதரவில் பம்பாய் பாரதீய வித்தியாபவனம் வருடந்தோறும் மாசி மாதமும், கார்த்திகை மாதமும் நடத்தி வருகின்ற பிரவேச, பிராரம்ப பரீட்சைகள் மாசிமாதம் பதினெட்டாம் திகதி ஆரம்பமாகின்றன.

புத்தூரைக் கேந்திர நிலையமாகக் கொண்டு யாழ்ப்பாணம், சுன்னுகம் முதலிய இடங்களிற் பரீட்சைகள் நடைபெறும். பாரதீய வித்தியாபவனத்தின் கிளையாக வட இலங்கை சமஸகிருத சம்மேளனம் இலங்கையிலும் நிறுவப்பட்டிருக்கிறது. இச்சம்மேளனம் இங்கு நடைபெறும் பரீட்சைகளுக்கு உதவியாக இருந்து வருகின்றது.

## சுழிபுரம் கிராமசபைத் தலைவர் தெரிவு

### அங்கத்தவர் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், புதன்.

சுழிபுரம் கிராமசபையின் தலைவர் தேர்தல் இம்மாதம் 9ம்திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கபபட்டிருந்தது தெரிந்ததே.

இத்தேர்தலை இன்னேர் திகதிக்கு ஒத்திவைக்கும்படி இக்கிராமசபையின் 4-ம்வட்டார அங்கத்தவரான திரு கே. குமாரசாமி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு ஓர் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார் எனத்தெரிகிறது. போதியகால அறிவித்தல் கொடுக்கப்படவில்லையெனத்தெரிகிறது.

# காவல் கைதிகளுடன் தொடர்புகொள்வது முடியாது

கொழும்பு, புதன்

சதித் திட்டம் சம்பந்தமாகக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களைப் பார்ப்பது, கடிதத் தொடர்பு கொள்வது ஆகியன அவசரகாலச் சட்டத்தின் கீழான கட்டளைப்பிரகாரம் சாத்தியமில்லை. நேற்று வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. கடிதம் எழுதுதல், பார்க்கச் செல்லுதல் ஆகியன சம்பந்தமாக முடிவு செய்யும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கே உண்டு என அறிவிக்கப்பட்டது.

## வேதாகம சைவ சித்தாந்தசபை

தெல்லிப்பழை, புதன்

ஈழநாட்டு வேதாகம சைவ சித்தாந்தசபையைத் திருத்தியமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன இதுசம்பந்தமாக விசேஷ கூட்டம் விரைவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## தேர்தல் பிரசார சினிமா

### நிபந்தனைகளுடன் அனுமதி

சென்னை, பெப். 7

தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்துக்கு திரைப் படங்களை அரசியல் கட்சிகள் உபயோகிப்பதற்கு சில நிபந்தனைகளுடன் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

திரைப் படங்கள் காட்டப்படும் நிரந்தர சினிமாத் தியேட்டர்களிலோ, டூரிங் படமாளிகைகளிலோ தேர்தல் பிரசாரத் திரைப்படங்கள் காட்டப்படக் கூடாது. இவை தவிர, வேறு இடங்களில் இத்திரைப் படங்கள் காட்டலாம். ஆனல் கட்டணம் வசூலிக்கக் கூடாது. தணிக்கைச் சபை அனுமதி மறுத்த படங்களையும அரசாங்கத்திஞல் தடை செய்யப்பட்ட படங்களையும் தேர்தல் பிரசாரத்துக்கு உபயோகிக்கக் கூடாது.

## ஆசிரியர்களுக்கு அடையாள கார்ட்டுகள்?

கொழும்பு, புதன்

கல்வி இலாகா சகல ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் விரைவில் அடையாளக் கார்ட்டுகளை வழங்கும்.

பலர், ஆசிரியர்கள் அல்லது அதிபர்கள்மாதிரி கல்வி இலாகா தலைமைக் காரியாலய வாசலுக்குள் நுழைகின்றனர் என்றும் இவர்களை அடையாளம் கண்டுபிடிப்பதில் காவற்காரர்கள் மிகுந்த சிரமப்படுவதாகவும் கல்வி இலாகா அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இதைத் தடுப்பதற்காக பாடசாலை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் கல்வி இலாகா அடையாளச்சீட்டுகள் வழங்கலாம் எனத் தரிகிறது.

# மூன்று முக்கிய கட்சிகளின் தலைவர்கள்

## ஆந்திராவில் தேர்தலில் போட்டியிடுகின்றனர்

### அபேட்சகர்கள் தொகை விபரம்

ஹைதராபாத் பெப்: 7

இந்தியாவிலுள்ள மூன்று முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆந்திர ராஜ்யத்தில் தேர்தலில போட்டியிடுகின்றனர்.

காங்கிரஸ கட்சியின் தலைவர் என. சஞ்சீவ ரெட்டி ஆந்திர சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகிருர். இவரை எதிர்த்து இரண்டு பெண்கள் உட்பட ஐந்து சுயேச்சை அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

சுதந்திராக் கட்சித தலைவர் பேராசிரியர் என். ஜி. ரங்கா தெனலித் தொகுதியில் லோக சபை ஸதானத்துக்கு போட்டியிடுகின்ருர். இவரை எதிர்த்து காங்கிரஸ அபேட்சகர் ஒருவரும் கம்யூனிஸட் அபேட்சகர் ஒருவரும் போட்டியிடுகின்றனர்.

ஜனசங்கக் கட்சியின் தலைவர் திரு. ஏ. ராமராவ் ராஜமகேந்திரம் தொகுதியிலிருந்து லோகசபை ஸதானத்துக்கும் போட்டியிடுகின்ருர். இவரை எதிர்த்து இரண்டு சுயேச்சை அபேட்சகர்களும் காங்கிரஸ அபேட்சகரான திரு. டி. எஸ. ராஜுவும் போட்டியிடுகின்றனர். திரு. ராஜா திரு. ராமராவின் நெருங்கிய உறவினர்.

லோகசபை சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார் சித்தூர்த் தொகுதியில் லோக சபை ஸதானத்துக்கு போட்டியிடுகின்ருர். இவரை எதிர்த்து சுதந்திராக்கட்சிஅபேட்சகரும் சுயேச்சை அபேட்சகர் ஒருவரும் போட்டியிடுகின்றனர்.

மத்திய அரசாங்க வர்த்தமந்திரி திரு. கோபால்ரெட்டி லோகசபை ஸ்தானத்துக்குப் போட்டியிடுகிருர். இவரை எதிர்த்து சுதந்திராக்கட்சி அபேட்சகர் ராமச்சந்திர ரெட்டியும் ஜனசங் அபேட்சகர் நாகபூஷண ராவும் போட்டியிடுகின்றனர்.

ஆந்திர ராஜ்யத்திலிருந்து 43 லோகசபை ஸ்தானங்களுக்கு 147 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். எல்லா தொகுதிகளிலும் காங்கிரஸ தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. சுதந்திரக்கட்சி 28 தொகுதிகளிலும் கம்யூனிஸட் கட்சி 20 தொகுதிகளிலும் ஜனசங் கட்சி 8 தொகுதிகளிலும் குடியரசுக் கட்சி 4 தொகுதிகளிலும் பிரஜா சோஷலிஸட் கட்சி ஒரு தொகுதியிலும் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. இதர கட்சிகளும் சுயேச்சையாளர்களுமாக மற்றும் 43 பேர் போட்டியிடுகின்றனர்.

ஆந்திர சட்டசபையில் 296 ஸ்தானங்களுக்கு 979 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். காங்கிரஸ் எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. சுதந்திராக் கட்சி 140 ஸதானங்களுக்கும் கம்யூனிஸட் 136 ஸதானங்களுக்கும் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. இதர கட்சிகள் நிறுத்தியுள்ள அபேட்சகர் தொகை விபரம் வருமாறு:-

ஜனசங் 70; குடியரசுக்கட்சி -15, சோஷலிஸட் கட்சி- 14, பிரஜா சோஷலிஸட - 13, இதர கட்சிகளும் சுயேச்சையாளரும் 304.

## அபேட்சகரின் உண்ணாவிரதம்

ராஜ்கோட், பெப். 7

[illegible]ரந்திரநகர ஜில்லா தாரங்கதரா தொகுதியிலிருந்து குஜராத் அசெம்பிளிக்கு சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும், ஸ்ரீ காந்திலால்ஷா என்பவர் ஹால்வாட், மேஹர்சாஞ இடையே ஓடும் கிர்தி எக்ஸபிரஸில் நேரடிப்பெட்டியொன்றை விடவேண்டும் என்று கோரி தாரங்கதரா ரயில்வே ஸ்டேஷன்முன்புநேற்றுஉண்ணவிரதம ஆரம்பித்தார்.

சனிக்கிழமையன்று உண்ணவிரதம் ஆரம்பிப்பதாக இருந்த ஹால்வாட் நகரசபைமெம்பர் ஸ்ரீஹரிபிரசாத்சுக்ளா பெப்ரவரி 23ந் திகதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

## இவர்கள் விடுதலை

சாவகச்சேரி, செவ்வாய்

தச்சன்தோப்பைச் சேர்ந்த கிட்டிணன் பெண் பஞ்சவர்ணத்தைக் கோடரியால் எறிந்து காயப்படுத்தியதாக அல்லூரைச் சேர்ந்த கந்தர் சின்னத்தம்பி மீது குற்றம் சாட்டிச் சாவகச்சேரிப் பொலிசார் வழக்கு தொடர்ச்திருந்தனர். சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு வைத்திலிங்கம் எதிரியைக் சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

## இறக்குமதித்தடை

கொழும்பு, புதன்

குறிக்கப்பட்ட 22 பொருட்களுக்கு இறக்குமதித்தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

# சரியாக விலாசமிடாததால் கிடைக்காத பொருட்கள்

## பற்பகுதியில் லட்சக்கணக்கில் உள்ளன

கொழும்பு, புதன்

சரியாக விலாசமிடாததால் 1959 -60ம் நிதிவருடத்தில் 5, 01,927 பதிவு செய்யப்படாதபொருட்களும், 9331 பதிவு செய்யப்பட்ட பொருட்களும் 414 பார்சல்களும் விலாசமிடப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லைஎனத்தெரிகிறது.

விநியோகிக்கப்படாத கடிதங்களில் ரூ.1,73,591-72 பெறுமதியான மணியாடர்கள், செக்குகள். போஸடல்ஆடர்கள் ஆகியன காணப்பட்டன.

இப் பணத்தின் பெரும்பகுதி அனுப்பியவர்களுக்கே திரும்ப அளிக்கப்பட்டது. மீதிப்பணம் தபால் இலாகாவால் டிப்பாஸிட்டில் வைக்கப்பட்டது;

இக்காலத்தில் 215 தபாற்கந்தோர்களிலும், உபதபாற்கந்தோர்களிலும் 2,044 தடவை சோதனையிட்டதில் ரூ. 51,208-72 காணப்படவில்லை; தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் 236 ஊழல்களும் ஒழுங்கீனங்களும் காணப்பட்டன.

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு?

லண்டன், பெப். 7

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமாக காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாடு கூடவேண்டியது அவசியமாஞல் உரிய நேரத்தில் அந்த மகாநாட்டைத் தாம் கூட்டுவதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

இதுபற்றி நியுஸிலந்து பிரதமர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாட்டைக் கூட்டவேண்டிது சந்தர்ப்பம் இன்னும் வரவில்லையென்று கூறினர்.

## ருமேனியா . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மொன்றுக்குமிடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது

இந்த உடன்படிக்கையின் படி ருமேனியாவிடமிருந்து சுமார் 35 லட்சம் பறுமதியான பெட்ரோலியம் பொருள்களை இலங்கை வாங்கும். பெட்ரோலியம் பொருள்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்துக்கு இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களை ருமேனிய ஸதாபனம் இலங்கையிடமிருந்து வாங்கும்.

# 'இளம்பெண் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தார்'

## கொலை வழக்கில் கார் சாரதி சாட்சியம்

தெஹிவளை, புதன்

"நான் ஒரு கார்ச் சாரதி. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு, 'பியசிறி ஹோட்டலுக்கு, எதிரில் நிறுத்தப்பட்ட ஒரு டாக்ஸிக்குள் நித்திரை செய்தேன். திடீரென ஒரு பெண்ணின் அழுகைக் குரல் எனக்கு கேட்கவே, நான் விழித்துக்கொண்டேன். அந்த அழுகைச் சத்தம், அந்தக் கடைப்பக்கம் இருந்துதான் வந்தது".

கொழும்பு தெற்கு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. ஈ. எப். டி. சில்வா முன்னிலையில் கே. ஏ. அல்பேட் மேற்கண்டவாறு கூறினர்.

எச். கே. ஜே. சைமன் பெர்ணன்டோ என்பவர். சி. தன்டிறிகி வின்சொலினி என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக, அவர்மீது குற்றம்சாட்டி இவ்வழக்கு பதிவாகியிருந்தது.

கே. ஏ. அல்பேட் மேலும் தெரிவித்ததாவது:

"பெண்ணின் அழுகைக் குரலைக்கேட்ட சிறிது நேரத்தில் நான் ஓட்டோடிச் சென்றுபொலிஸுக்கு போன் செய்தேன். சில நிமிட நேரத்துக்குள் பொலிஸார் அங்கு வந்துவிடவே, நானும் பொலிஸாருடன் சேர்ந்து அந்தக் கடைக்குள் நுழைந்தேன். உள்ளே சென்று பார்த்த சமயம், ஒரு இளம்பெண் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டேன். அங்கு கிடந்த ஒரு கத்தியை பொலிஸார் கண்டெடுத்தனர்"

தெஹிவளையைச் சேர்ந்த ஏ. சிறிசேன என்பவர் பின்வருமாறு தெரிவித்தார்: "சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு நான் பாமன்கடையிலுள்ள ஒரு 'கிளப்'பில் தங்கியிருந்தேன். விடியற்காலை 2 மணியளவில் ஒரு பெண்ணுடைய அழுகைக் குரலைக்கேட்டு, நான் எழுந்து கொண்டேன். சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றேன். அங்கு, அல்பேட் என்பவரைக் கண்டு பொலிஸுக்குப் 'போன்' பண்ணும்படி நான் அவரைக் கேட்டேன். பொலிஸார் அங்குவந்த சமயம், நானும் அவர்களுடன் கடைக்குள் நுழைந்தேன். அங்கு, மெத்தையொன்றில் ஒரு பெண் படுத்திருக்கக் கண்டேன். எங்கும் இரத்தம் படிந்துகிடந்தது".

இச்சமயத்தில் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## கால்நடைச் சந்தைகள்

முள்ளியவளை, புதன்

இலங்கையடங்கிலும் கால்நடைச் சந்தைகளை நிறுவுவதற்கு, விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, எம். பி. க்கள் சிபார்சு செய்யும் இடங்களில் சந்தைகளை உண்டாக்கி, அவற்றின் மூலம் விவசாயத்துக்கு உதவாத கால்நடைகளைக் கிராமவாசிகள் விற்பதற்குவசதியேற்படுத்தப்படும்.

தண்ணீரூற்று, தண்ணீர் முறிப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மாங்குளம், ஓமந்தை, மடுக்கந்தை, செட்டிக்குளம், நெடுங்கேணி. வவனியா ஆகிய இடங்களில் கால்நடைச் சந்தைகள் திறக்கப்படவேண்டுமென வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் சிபார்சு செய்துள்ளாரெனத் தெரிதெரிகிறது.

## கிரிக்கட்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூரைச் சேர்ந்த மத்திய கோஷ்டிக்கும், திருநெல்வேலியைச் சேர்ந்த ...வுன் கோஷ்டிக்கும் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில், மத்திய கோஷ்டி 6விக்கெட் 91டன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## தபால்கந்தோரின் தரம் உயர்த்தப்பட்டது

கம்பளை. புதன்

கம்பளையிலுள்ள தபால்கந்தோரின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட இப்புதிய தபால்கந்தோரை, போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல திறந்து வைத்தார்.

## தாச்சிவிளையாட்டு

சங்கானை, புதன்

சங்கானை ஸ்ரீ பாரதி ஜன சமூக நிலையத்திற்கும் தையிட்டி கோஷ்டிக்குமிடையே ஸ்ரீபாரதி நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தாச்சி விளையாட்டுப் போட்டியில் ஆறுபுள்ளிகளால் ஸ்ரீ பாரதி நிலையத்தார் வெற்றியீட்டினர்.

## பிரதம மாஜிஸ்திரேட்

கொழும்பு, செவ்வாய்

சிலாபம் மாவட்ட நீதிபதி திரு. டி. கியு. எம். சிறிமனே, எதிர் வரும் மார்ச் மாதம் 8-ம் திகதி முதல் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட்டாக கடமையாற்றுவார்.

## அரவம் தீண்டி மரணம்

பொத்துவில், செவ்வாய்

பொத்துவில், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திரு. தம்பிலெப்பை முகைதீன் என்பவர் நித்திரை செய்து கொண்டிருந்த சமயம் அரவம் தீண்டி மரணமானர்.

## புதிய மண்டபம்

பளை, புதன்

புலோப்பளைக் கிராமச்சங்கத்தினல் அண்மையில் அமைக்கப்பட்ட புதிய மண்டபம் பளைச் சந்தையில் பொதுமக்கள் பாவிப்பதற்காக இம்மாதம் முதல் விடப்பட்டுள்ளது. இப்பொழுது இங்கு இடவசதி போதுமானதாக இருக்கிறது.

# 9 மாதங்களில் ரூ. 2கோடி நஷ்டம்

## ரயில்வே ஜெனரல் மானேஜர் அறிக்கை

கொழும்பு, புதன்

கடந்த நிதிவருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் இலங்கை ரயில்வேயக்கு 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ரயில்வேப் பகுதியின் வருமானங்கள் செலவுகள்பற்றி ரயிவே ஜெனரல் மனேஜர் திரு. டி. ரம்பாலா சமர்ப்பித்த அறிக்கையில்பிரஸ்தாப காலப்பகுதியில் 920,93,601 ரூபாய் வருமானம்கிடைத்துள்ளதென்றும், ஆனல் 826,09,917 ரூபாய் செலவுசெய்யப்பட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

## அரசியல் திட்ட திருத்தம்

கொழும்பு, செவ்

இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கும் அடிப்படை உரிமைகள் பற்றிய ஷரத்துக்களையும் சேர்ப்பதற்கும் அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்வது சம்பந்தமான பார்லிமெண்டரித் தெரிவுக் கமிட்டியில் சேவை செய்வதற்கான பார்லிமெண்ட் அங்கத்தவர்களையும் செனட்சபை அங்கத்தவர்களையும் நியமிக்கும் அலுவலை அரசாங்கம் துரிதப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் நான்கு மாதங்களில் பார்லிமெண்டின் தற்போதைய கூட்டத் தொடர் கலைக்கப்படவிருப்பதாலும் அரசியல் திட்டத் திருத்த வேலைகள் நீண்ட காலத்தை இழுக்குமெனக் கருதப்படுவதாலும் தெரிவுக் கமிட்டியை நியமிக்கும் அலுவல்கள் துரிதப்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகிறது.

## விற்பனைக்கு 13தங்கப்பாளங்கள்

கொழும்பு, செவ்வாய்

பதின் மூன்று தங்கப்பாளங்களை சுங்கஇலாகா அதிகாரிகள் விற்பனைக்கு விட்டுள்ளனர். இந்தத் தங்கப்பாளங்கள் முழுவதின் நிறையும் 914 தோலாக்கள் எனக்கணக்கிடப்பட்டுள்ளது. 'டெண்டர்' அடிப்படையில்தான் இந்த விற்பனை நடாத்தப்படும் எனத்தெரிகிறது.

## கலவர அகதிகளுக்குக் காணி

### 20-ம்திகதி காணிக்கச்சேரி

முள்ளியவளை, புதன்.

1958-ம் ஆண்டுக்கலவரத்திறற் பாதிக்கப்பட்டு அகதிகளாக வவனியாவுக்கு வந்தவர்களுக்கு வழங்குவதற்கென க் காணி ஒதுக்குமாறு, வவனியா எம். பி திரு தா. சிவசிதம்பரம் அரசாங்க அதிபரை வற்புறுத்தியதன் பயனக, பாலமோட்டை என்னும் இடத்தில் 300 ஏக்கர் வயற்காணியும், 100 ஏக்கர் மேட்டுநிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதை வளங்குவதற்கான காணிக்கச்சேரி இம் மாதம் 20-ம்திகதிவவனியாவில் நடைபெறும் எனவும் 15-ம்திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பபடவேண்டுமெனவும்அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட்ட வடிவமான முட்டை

பண்டாரவளை, புதன்.

பண்டாரவளை சந்தையில் உள்ள ஒரு கடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு அதிசய முட்டையைப் பார்க்க, சென்ற ஞாயிற்றுக்கிழமை ஏராளமான மக்கள் வந்திருந்தனர். அந்த அதிசயமுட்டை, வட்ட வடிவமாக சூரியனின் அடையாளத்தைப்போல இருந்தது.

அதிசய முட்டையை இட்ட கோழி, அதற்கு முன் இரண்டு சாதாரண முட்டைகளை இட்டிருந்தது. சென்ற திங்கட்கிழமை காலை அந்தக்கோழி, சூரியனைப்போன்ற அடையாளமான முட்டையை இட்டது.

இந்த முட்டையைப் பற்றி சோதிடர்கள் குறிப்பிடுகையில் மகிழ்ச்சிக்குரிய அறிகுறி எனத் தெரிவித்தனர்,

## 5 நாளாக அம்மை நோய் இல்லை

கொழும்பு, புதன்

கடந்த 5 நாட்களாக புதிதாக எவருக்கும் அம்மை நோய் காணப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

# கள்ளக் கடத்தலை கண்டு பிடிக்க உதவியவர்கள்

## ரூ. 10 லட்சம் சன்மானம் பெறுவார்கள்!

கொழும்பு, புதன்

5,83,200 ரூபாய் பெறுமதியான தங்கம் கள்ளக்கடத்தல் செய்யப்பட்டு வந்ததைக்கண்டுபிடிக்க உதவியவர்களுக்கு 10 லட்சம் ரூபாயை சன்மானமாக வழங்குவதெனச் சுங்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

சுமார் 36 தங்கப்பாளங்கள் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட்டு கள்ளத்தனமாக இங்கு கொண்டுவரப்பட்டது சம்பந்தமாக இஸ்ரேலைச் சேர்ந்த இரு வியாபாரிகளைச் சுங்கப்பகுதி கைதுசெய்திருந்தது. இந்த இருவர்மீதும் இப்போது 20 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்கடத்தல் முயற்சியை கண்டுபிடிக்க உதவியவர்களுக்கு அதிகதொகையான சன்மானம் வழங்குவது இதுவே முதல் தடவையாகும்.

இஸ்ரேல் வியாபாரிகள் இருவரும் தம்மீது விதிக்கப்பட்ட அபராதத்தை இதுவரை செலுத்தவில்லை எனத் தெரிகிறது.

கும்பெனித் தெருவில் ஒரு வியாபார ஸ்தாபனத்தை நடத்தி வந்துள்ள இவ்விருவரும் அபராதம் சம்பந்தமாக சுங்கப்பகுதி பிரதம அதிகாரிக்கு அப்பீல்செய்துள்ளார்கள். இந்த அப்பீலில் தவறினல் நிதியமைச்சருக்கோ அல்லது நீதி மன்றத்துக்கோ அவர்கள் அப்பீல் செய்துகொள்ளலாம்.


# யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகம் - புத்தகசாலையில்

## பரிசில்கள் பெறுபவர்கள்

1-1-62 முதல் 31-1-62 வரை மேற்படி ஸ்தாபனத்தில் ரூபா இருபத்திஐந்தின் மேல் பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் வாங்கியவர்களில் கீழ்க் காணும் இலக்க பில்களை உடையவர்கள் பரிசில்கள் பெற உரிமையுடையவர்களாகிருர்கள்.

| பரிசு | பில். இல. | பரிசில்களின் விபரம் |
|---|---|---|
| 1 | 3372 | மொனரு சைக்கிள் |
| 2 | 2445 | சுவர்க் கடிகாரம் |
| 3 | 2591 | மேசைக் கடிகாரம் |
| 4 | 39599 | பைலற் பேனு |
| 5 | 2730 | ,, |
| 6 | 3297 | ,, |
| 7 | 2454 | ,, |
| 8 | 2954 | ,, |
| 9 | 2350 | ,, |
| 10 | 2845 | ,, |
| 11 | 2911 | ,, |
| 12 | 2943 | ,, |
| 13 | 2253 | ,, |
| 14 | 3155 | ,, |
| 15 | 3596 | ,, |
| 16 | 2319 | ,, |
| 17 | 3613 | ,, |
| 18 | 3486 | ,, |
| 19 | 2569 | ,, |
| 20 | 2196 | ,, |
| 21 | 2985 | ,, |
| 22 | 2742 | ,, |
| 23 | 3517 | ,, |

28-2-62க்கிடையில் நேரடியாக வந்து பில்களைக் காட்டி மேற்படி இலக்கமுள்ள எங்கள் பில்களுக்குரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்ருேம்.

28-2-62க்குப் பிந்தி வரும் பில்கள் கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
விவேகானந்த அச்சகம்-புத்தகசாலை

விவேகானந்தாக் கட்டிடம்,
யாழ்ப்பாணம்.



# 'ஈழநாடு' இஸ்ரேல் அனுபந்தம்

★ 11-2-62-ல் வெளியாகும் ஈழநாடு இதழுடன் இஸ்ரேல் அனுபந்தமும் இணைக்கப்படும்

வளுந்தரத்தில் வளம் பெற்று வளர்ந்து வரும் இஸ்ரேலைப்பற்றியவிபரமான கட்டுரைகளையும் அழகிய படங்களையும் தாங்கி இந்த அனுபந்தம் வெளியாகின்றது.

பக்கங்கள் 16 : தனிப்பிரதி சதம் 15

# 'எனக்கு வாழ்க்கை கசந்துவிட்டது'

## டாக்டரிடம் இளம்பெண் கூறினர்

கொழும்பு, புதன்

"எனக்கு வாழ்க்கை கசந்து விட்டது." தெமட்டக்கொடையைச் சேர்ந்த 15 வயதுள்ள டி. சித்திராணி என்பவர், இறப்பதற்கு முன்னர் டாக்டரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

சித்திராணியின் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஈ.பி. வீரக்கூன் விசாரணைநடத்தியபோது மேற்கூறிய சம்பவம் தெரியவந்தது. விசாரணை முடிவில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

விசாரணையின்போது இறந்தவரின் தந்தை டி. எம். ஹேமதாசா பின்வருமாறு தெரிவித்தார்:- நான் குஷ்டரோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தேன், சித்திராணி எனது ஒரே மகள். எனது மனைவி என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அதற்குப்பின்னர், எனது வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் நான்தான் கவனித்துவந்தேன். எனது 'பென்ஷன்' வருவாயைக் கொண்டு எனது மகளைக் காப்பாற்றிவந்தேன், நான் குஷ்டநோய் ஆஸ்பத்திரியில் சேர்ந்த பின்னர், மகளை எனது தம்பியார் வளர்த்துவந்தார்.

பெப்ரவரி மாதம் 4ந்-திகதி நான் ஆஸ்பத்திரியில் இருந்த சமயம்; எனது மகள், எரிகாயங்களுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்தேன். நான் விரைந்துசென்று அங்கு போய்ப் பார்த்தேன்; எனது மகள் மூர்ச்சையற்ற நிலையில் கிடந்தார். காலை 9-30-க்கு எனது மகள் இறந்துவிட்டாரென்பது தெரிய வந்தது."

பிரேதபரிசோதனையை நடத்தியடாக்டர்சி.எஸ். சின்னத்தம்பிகாயங்களினல்ஏற்பட்டஅதிர்ச்சியினல் மரணமானர் எனத் தெரிவித்தார். இறப்பதற்கு முன்னர் சித்திராணி, தமக்கு வாழ்க்கை கசந்துவிட்டது என்று டாக்டரிடம் கூறியிருந்தார்.

அவர் உடம்பு முழுவதும் மண்ணெண்ணையை ஊற்றி,பின்னர் தீவைத்து தற்கொலை செய்துகொண்டாரெனத் தெரியவந்தது.

## அதிசய ஆட்டுக் குட்டி

தெல்லிப்பழை, செவ்வாய்

மாசியப்பிட்டியைச் சேர்ந்த தம்பர் விசுவநாதன் என்பவருக்குச் சொந்தமான ஆடு ஒன்று இரு கால்களையுடைய குட்டி ஒன்றினை ஈன்றுள்ளது. இந்த அதிசய ஆட்டுக்குட்டியைப் பலரும் பார்த்து வருகின்றனர்.

—

## சோதிடர்கள் மறைந்தனர்!

குருநாகல், புதன்

சோதிடர்களின் கூற்றை நம்பி எட்டுக்கிரக சேர்க்கையினல் அபாயம் வரப்போகிறது என்று கவலைகொண்ட மக்களின் உள்ளங்கள், சூரியனின் வருகை கண்டு குளிர்ந்தது. எங்கும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் கடைபெறவில்லை. ஆனல் கிரக சேர்க்கையின் அபாயங்களைப் பற்றிக் கூறிய சோதிடர்கள், எங்கு மறைந்துவிட்டார்கள் என்பது தான் இங்குள்ள மக்களின் கவலையாக இருக்கிறது.

—

## கருவாடு தட்டுப்பாடு

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டியிலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளிலும் விற்பனை இலாகாவிலும் கருவாட்டுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. குறைந்தது, ஒரு அவுன்ஸ் கருவாடு கிடைப்பதே அரிதாகவிருக்கிறது. ஆனல் தனிப்பட்ட வர்த்தகர்கள், ஒரு ருத்தல் கருவாட்டை சுமார் ரூ. 2-50, ரூ. 3-00க்கு விற்பனை செய்கிருர்கள்!

# 'தொகுதி மக்களுக்கு எம். பி.க்கள் சேவை செய்யாவிடின்...

## இறந்தபின் அவர்கள் ஆத்மாவுக்கு சாந்தியில்லை'

—எம். பி.

குளியாப்பிட்டி, புதன்

'பார்லிமெண்ட் அங்கத்தவரொருவர், அவரது தொகுதி மக்களுக்குச் சேவை செய்யாவிடில், அவர் இறந்த பின்னர் அவரது ஆத்மா சாந்தியடையாது' என்று நளுங்கொட ஸ்ரீ நகவனருமவிகாரை ஞாயிறு பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கட்டுக்கம்பளை எம். பி. திரு. லீலாநந்தா வீரசிங்கா கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

எவ்வளவு இடையூறுகள் வந்தாலும், பொதுமக்களுக்குச் சேவை செய்வது எம். பிகளின் கடமையாகும். மக்களின் சேவையே தங்களின் பாக்கியம் என எம். பிக்கள் கருத வேண்டும். தனது தொகுதி மக்களுக்கு ஒரு எம். பி. சேவை செய்யாவிடில், அவர் இறந்த பின்னர் அவரது ஆத்மா சாந்தி அடையாது."

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வியாழன் 8-2-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 வயலின்.

இரவு 7-00 ஏ. கந்தையா—பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 டாக்டர் இரஞ்சிதம்—தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை, 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள் இசை, 6-50 [illegible]திப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வானெலி கான கோஷ்டி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-30 குரல் இசை, 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 குடிசைத் தொழில் வளர்ச்சி—சித்திரம், 7-45 ராகம். தானம், பல்லவி—என். நரஸிம்ஹுலு—பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல் 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத சித்திரம்.

—

## உதைபந்தாட்டம்

அல்வாய், புதன்

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் அல்வாய் மனேகரா விளையாட்டு மைதானத்தில் யங்லயன்ஸ் கோஷ்டியினர் ஓர் உதைபந்தாட்டப்போட்டியை ஒழுங்கு செய்தார்கள்.

ஆனல் எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணக் கோஷ்டியினர் ஏதோ காரணத்தால் சமூகங் கொடுக்காது விடவே வதிரி டயமன்ஸ்இரண்டாவது(பி)பிரிவினர் அன்றைய தினம் விளையாட உடன்பட்டதுஅங்குவந்திருந்த ஏராளமான ரசிகர்களுக்கு ஓர் சந்தர்ப்பத்தை அளித்தது,

வதிரி டையமன் (பி)கோஷ்டி 4-2 கோல்களினல் வெற்றியடைந்தது.

—

## கிராமசபை தலைவர் தேர்வு

பளை, புதன்

எதிர் வரும் 10-2-62 சனிக்கிழமை நடைபெறுமென எதிர்பார்த்த முகமாலைக் கிராமசபை தலைவர் தெரிவு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


பாலகனுக்கு எவ்வளவு காலம்தான் நீங்கள் வெறும் பாலை மட்டும் ஊட்டி வளர்க்கமுடியும்?

பார்லீஸ்

கனிப் பொருட்களும் விட்டமின்களும் கலந்த தொரு தனி உணவாகும்—மிக மென்மையான ஜீரணத்திற்குக் கூட உகந்ததொரு சமதை உணவு.

குழந்தை மூன்று, நான்கு மாதங்களானதும், முன்பைப்போல் வெறும் பாலை மட்டும் ஊட்டிப் பெற்ற அதே திடவிருத்தியையோ வளர்ச்சியையோ காணுமை கண்டு நீங்கள் அதிருப்தியடைவீர்கள்.

பாலோடு வேறு உணவையும் குழந்தைக்கு ஊட்டுவதற்கு ஏற்ற காலம் இதுவே. ஆனல் அச்சமயத்தில் ஓர் ஒழுங்கு முறையை மேற்கொள்ள வேண்டும். பாலோடு சேர்த்துக் கொடுக்கக் கூடிய முதல் கட்டி உணவு பார்லீஸ் என்பதை தலைமுறை தலைமுறையாக தாய்மார்கள் அறிவர்.

FARLEY'S

Baby's First Solid Food.






பார்லீஸ் உணவைத் தயாரிப்பது மிகச் சுலபம் சூடான பாலைச் சேர்த்துக் கொண்டால் போதும்

# கலை அரங்கம்

## சரோஜா தேவியை நாய் விரட்டியது!

### ஜெமினி கணேசன் காப்பாற்றினர்!

சரோஜாதேவியை நாய் ஒன்று விரட்டியது! கூக்குர விட்டுக்கொண்டு ஓடி அருகிலிருந்த ஏணியின் வழியாக வீட்டு மாடிக்கு ஏறினர். ஆனல் அப்போதும் நாய் விடவில்லை. அந்தப் பொல்லாத நாய் பின்னல் ஏறியது. வேறுவழியின்றி மாடியில் நின்ற ஜெமினி கணேசனை உதவிக்கு அழைத்தார் சரோஜா தேவி.

இதுதான் சமயம் என்று 'ஆண்களே இல்லாத உலகத்திலே பெண்களினலே என்ன பயன்?..." என்ற பாட்டை பாடச்சொன்னர். அதுமட்டுமல்ல அவ்விதம் பாடினல்தான் மேலே தூக்கிவிடுவதாகவும் கூறினர்.

வேறுவழி இல்லாமல் அந்தப் பாட்டைப் பாடினர் சரோஜா தேவி!

இந்த இக்கட்டான நிலையில் கூட ஜெமினி கணேசனுக்குப் பாட்டு வேண்டியிருக்காஎன்று நீங்கள் கேட்க நினைக்கலாம். இந்தக்காட்சி மதன் தியேட்டர்சாரின் "ஆடிப் பெருக்கு" படத்துக்காக மெஜஸ்டிக் ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. கதை வசனத்தை ஜாவர் சீதாராமன் எழுதியுள்ளார். கே. சங்கர் டைரக்ட் செய்யும் இப்படம் விரைவில் வெளிவரலாமென எதிர்பார்க்கப்படுறது.

## ஆசிய ஆபிரிக்க திரைப்பட விழா

### இம்மாத நடுப்பகுதியில் கெய்ரோவில் நடைபெறும்

ஆசிய ஆபிரிக்கத் திரைப்பட விழா இம்மாத நடுப்பகுதியில் நடைபெறும்.

திரைப்படத் தயாரிப்பாளர்கள் திரு. பி. நாகிரெட்டியும், திரு. ஏ. எஸ். சீனிவாசனும் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள். தென்னகத்திலிருந்து நட்சத்திர நடிகர்கள் சிலர் இவ்விழாவில் கலந்துகொள்ளச் செல்வார்களெனத் தெரிகிறது.

இரண்டு வருடங்களுக்குமுன் கெய்ரோவில் நடைபெற்ற ஆசிய—ஆபிரிக்க திரைப்பட விழாவுக்கு "வீரபாண்டிய கட்டபொம்மன்" பரிசுபெற்றதும் அதில் கலந்துகொண்ட சிவாஜி கணேசன் சிறந்த நடிகரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## கொஞ்சும் சலங்கை ஜெர்மனி செல்கிறது

தேவி பிலிம்சாரின் 'கொஞ்சும்சலங்கை' கலர்ப்படம் ஜெர்மனிக்குச் செல்கிறது.

அங்கு நடக்கும் சினிமா விழாவில் கலந்துகொள்வதற்காக இப்படத்தை தென் இந்திய சினிமா அதிபர் சங்கத்தார் சிபார்சு செய்துள்ளனர்.

மேற்படி விழாவில் கொஞ்சும் சலங்கை திரையிடப்படும். தமிழ்நாட்டு கலாசாரத்துக்கு எடுத்துக்காட்டான படம் என்ற முறையில் 'கொஞ்சும் சலங்கை' சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## "நாவுக்கரசனெங்கே?"

இசைப் புலவர், சி. செல்லத்துரை

இராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

நாத சுர சங் கீதம் முழங்கு திரு
நாவுக்கரசனெங்கே - இசையரங்கில் - நாத

அனுபல்லவி

காதுங் கனிந்திடுங் கருத்துங்குளிர்ந்திடுங்
கமகம் பொலிந்திடும் கவலை ஒழிந்திடும்-நாத

சரணம்

சீர்காழியிற் பிறந்து பேராரிசை பொழிந்து
தேசம் புகழுமிசை மேதையென மலர்ந்து
பாரோர்புகழ யாழ்ப் பாணந்தனில் வளர்ந்து
"பத்மநாதன்" இசைப் பயிற்சி பெறப் புரிந்து-நாத

அண்ணமலை இசைப் பண்ணர் மன்றந்துலங்க
அகில இலங்கை வித்வ சபையுந் நனிவிளங்க
எண்ணர் கலைஞர்கூடும் இசையரங்க மிலங்க
இன்ப அமுதநாதம் பொங்கியிசை எழும்ப—நாத

விண்ணவர் விழாவினில் மேவிடச் சென்ருனே
மேலுறும் இராஜரத்ன மேதையைக் கண்டானே
அண்ணலாங் காந்திமகான் அன்பாயழைத்தாரோ
அந்தோ! அங்குள்ளவர் ஆர் தானழைத்தாரோ-நாத

## தமிழ் சினிமா ரசிகர் சங்கம்

### பரிசளிக்க முடிவு

இலங்கையின் 1961-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட படங்களில் சிறந்த படத்திற்கு பரிசளிப்பதென இலங்கை தமிழ் சினிமா ரசிகர் சங்க நிர்வாக சபையினர் முடிவுசெய்துள்ளனர். சிறந்த நடிகர், சிறந்த நடிகை, டைரக்டர், துணைநடிகர், நடிகை, கதை வசன கர்த்தா, பாடலாசிரியர், இசை அமைப்பாளர், படத்தை வெளியிட்ட இலங்கை ஸ்தாபனம் ஆகியோர்களுக்கு பரிசுகள் அளித்து கௌரவிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலை உடன் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது. ஈழத்து கலைத்துறையில் பணிபுரியும் பலர் இதில் இடம் பெறலாம். குறிப்பாக சினிமா, கலை, கலாச்சாரத் துறையில் சிறந்துவிளங்குபவரிடம், பத்திரிகை விமர்சகர்கள், கலாவல்லுனர்கள் பலரைக் கொண்ட செயல் குழுவொன்றை தெரிவு செய்யும் வேலையில் சங்கச் செயலாளர் கே. பாலச்சந்திரன் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை த்தமிழ் சினிமாரசிகர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

**போஷகர்கள்:-** அதிகாரி ஏ. செல்லமுத்து, திரு. சிவாஜி துரை, முன்னள் பொலிஸ் அதிபர் திரு. ஒஸ்மண்ட்டி' சில்வா, கொழும்பு மாநகரசபை கமிஷனர் திரு. பி. ஏ. ஜயசிங்கா.

**தலைவர்:-** எஸ். டி. சிவநாயகம்.

**உபதலைவர்கள்:-** ஜனப் எஸ். எம். கமால்தீன் திரு. ஏ. பி. ராஜ், திரு. பி டி. ராஜன்.

**பொதுச்செயலாளர்:-** திரு. கே பாலச்சந்திரன்.

**உதவிச்செயலாளர்:-** திரு. ஈ எம். ஈஸ்வரன்.

**தனதிகாரி:-** திரு. கே. ஆர். செல்வரத்தினம்.

**கௌரவ ஆலோசகர்கள்:-** மட்டக்களப்பு எம். பி திரு. எஸ். ராஜதுரை கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் திரு. தோமஸ் பெர்ணன்டோ, திரு. ராம. ஈஸ்வரா, மாநகரசபை அங்கத்தவர் ஜனப். ஏ. எம். நஸீர்.

### பம்பாய் நட்சத்திர கிரிக்கெட் போட்டி

திரைப்பட ஊழியர்கள் நிதிக்காக நடத்தப்பட்ட கிரிக்கட்போட்டியில் 40 நடிகை, நடிகைள் கலந்துகொண்டனர். ராஜ்கபூரும், திலிப் குமாரும் இரு கட்சிகளுக்குத் தலைமை தாங்கினர்.

பந்து வீச்சில் பிரபல இசையமைப்பாளர் ஜெய்கிஷன் 6 விக்கட்டுகள் எடுத்தார். ஆஷாபரேக், நந்தா முறையே இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தினர். திலீப் கோஷ்டி 152 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தது.

இரண்டாவதாக ஆட ஆரம்பித்த ராஜ்கபூர் கோஷ்டியில் தலைவரான ராஜ்கபூர் அபாரமாக ஆடி 53 ரன்கள் எடுத்தார்.

ஐ. எஸ். ஜோஹர் 47 ரன்களும், நிம்மி 15 ரன்களும் எடுத்தனர். பெண்களில் நிம்மி தான் அதிக ரன்கள் எடுத்தார். பந்து வீசுவதில் திலீப்குமார் திறமை காட்டி நான்கு விக்கட்டுகளை வீழ்த்தினர்.

பிரபல திரைப்பட ஆட்டக்காரர் எம். கே. மந்திரி நடுநிலைமையாளராக இருந்தார். டேவிட் ஆட்டவர்ணனை தந்தார்.

## 61-ம் ஆண்டு சிறந்த நடிகர் சிவாஜி கணேசன்

### மதுரை ஜெமினி கணேஷ் கலைக்குழு தேர்வு

1961-ம் ஆண்டு வெளிவந்த தமிழ்ப்படங்களில் நடிப்பிலே சிவாஜி கணேசன் முதல்வராக மதுரை ஜெமினி கணேஷ் கலைக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. மற்ற தேர்வின் முடிவுகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| சிறந்த படம் | பிரசாத் புரொடக்ஷன்ஸ் "தாயில்லாப் பிள்ளை |
| ,, நடிகர்: | சிவாஜி கணேசன் ('பாசமலர்', 'கப்பலோட்டிய தமிழன்") |
| ,, நடிகை: | சாவித்திரி கணேஷ் ( ,, ) |
| ,, வில்லன்: | எம். ஆர். ராதா ("குமுதம்") |
| ,, ஹாஸ்ய நடிகர்: | எஸ். ராமராவ் ("தாயில்லாப்பிள்ளை") |
| ,, ,, நடிகை: | டி. பி. முத்துலக்ஷ்மி ( ,, ) |
| ,, துணைநடிகர்: | எஸ். ஏ அசோகன் ('மணப்பந்தல்') |
| ,, நடிகை: | எஸ் விஜயகுமாரி ('குமுதம்') |
| ,, புதுநடிகர்: | கல்யாண்குமார் ("தாயில்லாப்பிள்ளை") |
| நடிகை: | புஷ்பலதா ("பணம் பந்தியிலே") |
| ,, பின்னணி பாடகர்: | டி. எம். சௌந்தரராஜன் ("பாலும் பழமும்") |
| ,, பாடகி, | பி. சுசீலா ("பாவ மன்னிப்பு") |
| ,, வசன கர்த்தா: | எம். எஸ சோலைமலை ("பங்காளிகள்") |
| ,, டைரக்டர்: | பிரசாத் ("தாயில்லாபபிள்ளை") |
| ,, இசை: | விஸ்வநாதன்-ராமமூர்த்தி ("பாவ மன்னிப்பு") |
| ,, ஒளிப்பதிவாளர்: | ஏ. வின்சென்ட் "தேன் நிலவு") |
| ,, பாடல்கள்: | கண்ணதாசன் |
| ,, தயாரிப்பாளர்: | பத்மினி பிக்சர்ஸ் |
| விசேஷப் பரிசு: | பத்மினிபிக்சர்ஸ்('கப்பலோட்டியதமிழன்') |


5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

பிரேம் நஸீர் மிஸ் குமாரி

நடித்த

மந்திரவாதி

Daily at 4 p. m. only
THE STORY OF RUTH
(This is a Story From the Bible)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.